வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 04.08.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 237 | பக்கங்கள் : 16




# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு முதலில் தேர்தல்!

## அரசாங்கத்தை வலியுறுத்துமாறு இந்திய தூதரிடம் மனோவின் கூட்டணி தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 05

**வடக்கு, கிழக்குக்கு முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துங்கள். பொலிஸ் அதிகாரத்தை பிரச்னையாக்கி மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாண சபையை மறுப்பது நியாயமல்ல.**

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் மனோ கணேசன் எம். பி. தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர் வே. இராதா கிருஷ்ணன், உதயகுமார் ஆகியோர் நேற்று வெள்ளிக்கிழமை இந்தியத் தூதுவரை சந்தித்து கலந்துரையாடினர். இந்த சந்திப்பு தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட மனோ கணேசன் எம். பி.,


"மாகாண சபை என்பது வடக்கு கிழக்குக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட தல்ல. ஒன்பது மாகாணங்களுக்கும் தேவை.

15

## 13 குறித்து சிங்கள தலைவர்கள் சாதகம் தமிழ் தலைவர்களே நாளுக்கொரு பேச்சு!

### விக்னேஸ்வரன் எம். பி. குற்றச்சாட்டு

### சமஷ்டி கோருவோரிடம் அடையும் வழி இல்லை!



யாழ்ப்பாணம்,ஓக. 05

13ஆவது திருத்தம் பற்றி சிங்கள தலைவர்கள் சாதகமாக சிந்திக்கிறார்கள் என நாம் கொள்ளலாம். ஆனால், தமிழ் அரசியல்வாதிகளை பற்றி தெரியாது. இன்று ஒன்று நாளை ஒன்று சொல்வார்கள் - இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சமஷ்டியை கோருகின்ற தமிழ்த் தரப்புகள் அதனை எவ்வாறு அடையப் போகிறோம்

15

### இந்தியா - இலங்கை கப்பல் சேவை

## தலைமன்னார் இறங்குதுறையை புனரமைப்பதற்கு நடவடிக்கை

மன்னார், ஓக. 05

இலங்கை - இந்திய கப்பல் சேவையை மீளவும் ஆரம்பிப்பதற்காக தலைமன்னார் இறங்குதுறை புனரமைக்கப்படவுள்ளது. இந்த இறங்குதுறை 180 கோடி ரூபாய் செலவில் 37 வருடங்களின் பின்னர் திருத்தியமைக்கப்படவுள்ளது என்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

புனரமைக்கப்படவுள்ள தலைமன்னார் இறங்குதுறையை துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வா நேற்று

15

## 13ஐ பற்றி 15 ஆம் திகதிக்கு முன் யோசனை கோருகின்றார் ரணில்

கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஜூலை 26 ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின்போது அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளையும் யோசனைகளையும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அனைத்து கட்சி தலைவர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். (அ)

## லொறி - வான் விபத்து ஐந்து பேர் உயிரிழப்பு!

### மூன்று சிறுவர்கள் படுகாயம்



கொழும்பு, ஓக. 05

லொறியை வீதியோரமாக நிறுத்த முற்பட்டபோது அதிவேகமாக பின்னால் வந்த வான் மோதி ஏற்பட்ட விபத்தில் ஐவர் உயிரிழந்தனர். மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை அநுராதபுரம் - குருநாகல் வீதியில் தம்புத்தேகம - எரியாகம பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குருநாகலில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த லொறி கடை ஒன்றின் அருகே நிற்பதற்காக வீதி யிலிருந்து ஒதுங்கியது. அந்தச் சமயம், பின்புறமாக வந்த வான் லொறியுடன்

15

## நகைக் கடை உரிமையாளரின் மனைவி ஹெரோயினுடன் கைது!

### மனைவியை தாக்கிய கணவரும் கைது

யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாணத்தின் நகைக் கடை உரிமையாளர் ஒருவரின் மனைவி ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று கைது செய்யப்பட்டார். பொலிஸ் தடுப்பிலிருந்த அவரை தாக்கிய குற்றத்துக்காக நகைக் கடை உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் இந்தக் கைது இடம்பெற்றது. இதில், கைதான பெண் 36 வயதுடையவர் என்றும் அவர், ஆனைக்கோட்டை பகுதியில் நீண்டகாலமாக போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் எனவும் கூறிய பொலிஸார், அவரை கைது செய்தபோது 80 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

15

## வீதி விபத்துகளை கட்டுப்படுத்த ஆளுநர் தலைமையில் கூட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 05

வடக்கு மாகாணத்தில் வீதி விபத்துகளை தடுப்பது தொடர்பில் வடக்கு ஆளுநர் தலைமையில் நேற்று ஆராயப்பட்டு பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில், மேல் மாகாணத்துக்கு அடுத்து வீதி விபத்துகள் அதிகம் நிகழும் மாகாணமாக வடக்கு காணப்படுகின்றது என்று யாழ். போதனா மருத்துவமனையின் எலும்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் கோபி சங்கர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

போதியளவு வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, வர்த்தக நிலையங்கள் சந்தைப்படுத்தலுக்காக வீதிகளை பயன்படுத்துகின்றமை, முறையற்ற வாகனத் தரிப்பிடங்கள், நடைபாதையற்ற வீதிகள் என்பவையும்

15

## பாராளுமன்றின் யோசனையை மாத்திரமே ஏற்றுக்கொள்வேன்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஓக. 05

அரச நிதி நிர்வாகம் தொடர்பான அதிகாரம் பாராளுமன்றத்திடம் மட்டுமே உள்ளது. எனவே, கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்றத்தை தவிர்ந்த வேறு எவருடையதும் யோசனைகளையோ நிபந்தனைகளையோ ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சம்பிரதாய அரசியல் முறைமைகள் ஊடாக நாட்டில் அராஜக நிலையை ஏற்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை

15

### சுழிபுரம் முருகன் ஆலய விவகாரம்:

## பல்கலைக்கழக மாணவர்கள் இன்று எதிர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 05

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரம் சங்கமித்தை நாட்டிய மரம் என வெளியிடபட்டட அரச வர்த்தமானி மீளப் பெறப்பட வேண்டும் எனத் தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு சுழிபுரம் சந்தியில் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளது.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

வரலாற்றை திரிபுபடுத்தும் சிங்கள அரசு இன்னும் ஒரு படி மேல் சென்று சுழிபுரம் பறாளாய்

15

# இப்படியும் நடக்கிறது

குதிரை பந்தயத்தில் நிறையப் பணம் சம்பாதிக்க வாய்ப்பிருப்பதையறிந்த இரு நண்பர்கள் ஆளுக்கு ஒரு 'ரேஸ்' குதிரையை வாங்கினர்.

ஒருவர் கேட்டார், 'நாம் நம் குதிரைகளை அடையாளம் தெரிந்து கொள்வதற்கு ஏதாவது செய்ய வேண்டுமே, என்ன செய்யலாம்?'.

அதற்கு மற்றையவர் சொன்னார், 'என் குதிரைக்கு மட்டும் வாலை சிறிதாக வெட்டி எடுத்து விடலாம், அதை வைத்து அடையாளம் தெரிந்துக் கொள்வோம்' என்றார்.

அதுபோல் ஒரு குதிரையின் வால் வெட்டப்பட்டது. ஆனால், அன்றிரவு அந்த வீட்டில் இருந்த குறும்புக்கார பையன் ஒருத்தன், மற்றைய குதிரையின் வாலையும் அதேபோல வெட்டிவிட்டதால், அடுத்த நாள் இருவரும் ஒரு குதிரையின் காதை எடுத்துவிட்டனர். இது இரு குதிரைகளும் தங்களுடைய காது, மூக்கு, கண் என்று உறுப்புகளை இழக்கும்வரை தொடர்ந்தது.

இப்போது குதிரைகள் நான்கு காலையும், கொஞ்சம் உயிரையும் வைத்துக் கொண்டு நின்றன. இதைப் பார்த்து கவலைப்பட்ட நண்பர்களில் ஒருவர் சொன்னார்:

'சரி இனி சிவப்பு குதிரை உன்னுடையது, வெள்ளை என்னுடையது'.

இந்தக் கதைதான் இப்போது அடிக்கடி ஞாபகத்துக்கு வருகின்றது.

தையிட்டியில் விகாரை குறித்து சில மாதங்களுக்கு முன்னர் பரபரப்பாகப் பேசப்பட்டது.

அந்த விகாரை தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் காணி உரிமையாளர்களின் அனுமதி பெறப்படாமல் கட்டப்பட்டது பற்றி பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு அந்த விகாரைக்கு அப்போதைய ஆளுநர் றெஜினோல்ட் கூரே அடிக்கல் நாட்டிய செய்திகள் அப்போது அநேகமாக எல்லா ஊடகங்களிலுமே வெளிவந்திருந்தன.

இவ்வாறு அடிக்கல் நாட்டியபோதே, அது தனியார் காணி என்றும், அதில் விகாரை கட்டுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் தையிட்டிக்குரிய உள்ளூராட்சி சபையான வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றியதோடு தமது பணி முடிந்தது என்று பிரதேச சபை இருந்துவிட்டது. அதிலும் சிறப்பு, அந்த பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியில் இருந்த போதிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் பலர் அந்தச் சபையில் இருந்தனர்.

ஆனால், நான்கு வருடங்கள் நடந்த கட்டுமானம் முடிந்து நூறு அடி உயரத்தில் விகாரை கட்டிமுடிந்த பின்னரே அதற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டம் நடத்தியது. இது குறித்து முன்னரும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

போராட்டம் என்றால், ஒரு கோரிக்கையை முன்வைத்து நடத்தப்படுவது. அதாவது தையிட்டி விகாரையை அகற்றவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே அந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டம் தொடங்கப்பட்டபோது விகாரை இடித்தழிக்கப்படும்வரை தொடரும் என்ற எதிர்பார்ப்பு பலரிடமும் இருந்தது. ஆனால், எந்தக் கோரிக்கைக்காக போராட்டம் நடத்தப்பட்டதோ அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமலே போராட்டம் நிறுத்தப்பட்டது.

இப்போது மாதந்தோறும் மீண்டும் மீண்டும் இரண்டு நாட்களுக்கு அந்த விகாரை செய்தியாகி வருகின்றது.

கடந்த திங்களன்று 'மீண்டும் தையிட்டி சட்ட விரோத விகாரைக் கட்டுமானத்துக்கு எதிராகப் போராட்டம் ஆரம்பம். இனத்தின் இருப்பைக் காக்கத் திரண்டு வாருங்கள்' என்ற அழைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ் அவர்களிடமிருந்து பகிரப்பட்டது.

வழக்கம்போல கஜேந்திரன் எம். பி. தலைமையில் அவருடன் விரல்விட்டு எண்ணக் கூடிய போராளிகள் அங்கு 'திரண்டு' இருந்தனர். பொலிஸாருடன் மல்லுக்கட்டும் காணொளிகளும் ஆங்காங்கே செய்திகளாக வந்தன.

அது என்ன மாதந் தோறும் இப்படியொரு போராட்டம் நடக்கின்றது என்று ஓர் ஊடகத் தம்பியிடம் கேட்டபோது அவர் சொன்னார், ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று போராட்டம் நடத்துகிறார்கள். விகாரையை அகற்றும் வரை போராட்டம் நடக்குமாம்' என்றான். அத்துடன், அவன் நிறுத்தியி ருந்தால் பரவாயில்லை. 'பாவம் தமிழ் மக்கள்' என்றான்.

நான் சொன்னேன், 'ஏனடா தம்பி, பாவம் தமிழ் மக்கள் என்கிறாய், அங்கே தமிழ் மக்கள் பெருமளவில் போகவில்லையே, ஒரு இருபது பேரைக்கூட காண வில்லையே' என்றேன்.

அதற்கு அவன் சொன்னான்: 'இல்லை அண்ணே, இவர்களைப் போன்றவர்களை தலைவர்களாக பெற்றதற்கு தமிழ் மக்கள் பாவம் என்றேன்' என்றான்.

- ஊர்க்குருவி.

# இஸ்லாமிய அமைப்புகள் மீதான தடைநீக்கம் மீள ஆராயப்படாது!

## பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, ஓக. 05

ஐந்து இஸ்லாமிய அமைப்புகளின் தடை நீக்கம் குறித்து மீள ஆராயப்போவதில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை தொடர்ந்து ஐந்து இஸ்லாமிய அமைப்புகளுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார். எனினும், கத்தோலிக்க திருச்சபை அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இதனைக் கண்டித்துள்ளனர்.

இந்த சூழ்நிலையில் தடை நீக்கப்பட்டமை குறித்து அரசு மீள்பரிசீலனை செய்யுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தற்போதைக்கு இது குறித்து மீள்பரிசீலனை செய்யும் திட்டம் எதுவுமில்லை என்று குறிப்பிட்டார்.

புலனாய்வுப் பிரிவினரும் பாதுகாப்புடன் தொடர்புபட்டவர்களும் இணைந்து தடைகளை நீக்கும் முடிவை எடுத்தனர் என்று தெரிவித்த அவர், "விமர்சனங்கள் உள்ளதை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம். எனினும், இதனைத் தீவிரமாக ஆராய்ந்த பின்னரே தடையை நீக்கியுள்ளோம். அரசியல்வாதிகள் எவரும் இதில் தொடர்புபடவில்லை" - என்று குறிப்பிட்டார்.

இது குறித்து நாங்கள் மீள்பரிசீலனை செய்யவில்லை என்றும் அவர் கூறினார்.

எனினும், தடை நீக்கப்பட்ட அமைப்புகளின் நடவடிக்கைகளை உரிய தரப்புக்கள் தொடர்ந்தும் கண்காணிக்கும். கண்காணிப்பு தொடரும். அவர்கள் பிழை செய்தால் தடை மீண்டும் நடைமுறைக்கு வரும்" - என் றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# மலையக மக்களின் நடைபவனி நேற்று மதவாச்சியை அடைந்தது

வவுனியா, ஓக. 05

மன்னாரில் தொடங்கிய மலையக மக்களின் நடைபவனி நேற்று வவுனியா செட்டிக் குளத்தில் இருந்து ஆரம்பமாகி மதவாச்சியை சென்றடைந்தது.

இதில் பல்வேறு நிறுவனங்களை சார்ந்தவர்களும் சிவில் சமூக செயல்பாட்டாளர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பகுதிகளில் இருந்து திரண்டு வந்த மக்களின் பேரணிகளும் "மலையகம் 200" பேரணியோடு இணைந்து பயணித்தன.

மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நடைபவனி கடந்த ஜூலை 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை தலைமன்னாரில் இருந்து இந்த நடைபவனி ஆரம்பமானது.

இந்த நடைபவனி எதிர்வரும் 12ஆம் திகதி மாத்தளை மாவட்டத்தில் நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மிகிந்தலை விகாரைக்கு மின்சாரம்; கட்டணம் செலுத்தியது சஜித் தரப்பு!

கொழும்பு, ஓக. 05

மகிந்தலை ரஜமகா விகாரைக்கு மீளவும் மின்சார விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளது. சஜித் பிரேமதாஸ தலைமையிலான பௌத்த ஆலோசனை குழு நேற்று வெள்ளிக்கிழமை மின்சார கட்டணம் செலுத்திய பின்னர் மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பியதாக மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலஹங்குன வேவே தம்மரத்ன தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ நேற்று விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"வரலாற்றுச் சிறப்புமிக்க மிகிந்தலை புனித தலத்தில் மின்வெட்டை வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவது அரசாங்கத்தின் அதியுயர் கடமை. இவ்வேளையில், அந்த உயர் சட்டத்தை மீறுவதை நாங்கள் கண்டிக்கிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி பௌத்த ஆலோசனைக் குழுவுடன் இணைந்து, அதன் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி, தலைவரின் ஆலோசனையின் படி மிகிந்தலை புனித பூமியை ஒளிரச் செய்யும் பணியில் ஈடுபட்டோம்", என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கவிதை நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 05

நிர்மலா சிவராசசிங்கம் எழுதிய கவிதை நூல்கள் வெளியீடும் அறிமுக விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் மெதடிஸ்த ஆலயத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் ஓய்வு நிலை முகாமையாளர் பி. கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை எழுத்தாளர் வே. தபேந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

எழில் விருத்தம் நூலுக்கு வல்வை சிதம்பரா கல்லூரி ஆசிரியர் கலாநிதி க. குணேஸ்வரன், பொன்வண்ணம் நூலுக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தன்ஆகியோர் நயவுரை ஆற்றவுள்ளனர். (ஐ)

# மூதூர் 17 பேர் படுகொலை யாழில் நினைவேந்தப்பட்டது



யாழ்ப்பாணம், ஓக. 05

மூதூர் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் மற்றும் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

கடந்த 2006 ஓகஸ்ட் 4ஆம் திகதி அரச கட்டுப்பாட்டிலிருந்த திருகோணமலை - மூதூரில் பிரான்சின் வறுமைக்கு எதிரான அரச சார்பற்ற அமைப்பை சேர்ந்த 16 தமிழர்கள் மற்றும் ஒரு முஸ்லிம் உள்ளடங்கலாக 17 உள்ளூர் பணியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது நினைவு கொள்ளத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
05.08.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நமது கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில், கட்சிகளின் பரிந்துரைகளை ஜனாதிபதியின் செயலாளர் கோரியிருக்கின்றார். இதற்கான உடன்பாடு ஏற்கனவே சர்வ கட்சிக் கூட்டத்தில் எட்டப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒரு புதிய அரசியல் யாப்பு இல்லை. எவ்வாறான தீர்வுகள் தொடர்பில் பேசுவதாக இருந்தாலும் அது ஒற்றையாட்சிக்குள்தான் பேசப்படும் – இதுதான் ரணிலின் நிலைப்பாடு.

புதிய அரசியல் யாப்பின் மூலமான, அரசியல் தீர்வொன்று சாத்தியமில்லை என்பதை இப்போது ரணில் புரிந்துகொண்டிருக்கின்றாரா – அல்லது முன்னர் அதனை புரிந்திருந்தும் அமைதியாக இருந்தாரா? ஒரு வேளை முன்னரும் அவர் இவ்வாறானதொரு நிலைப்பாட்டில் இருந்திருந்தால் புதிய அரசியல் யாப்பின் மூலம் பிரச்னைகளை தீர்க்க முடியுமென்று நம்பிய சம்பந்தனின் நிலைமைதான் பரிதாபத்துக்குரியது.

புதிய அரசியல் யாப்பு இல்லை. அதற்கான அழுத்தங்களும் வெளியிலிருந்து வரப்போவதில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசிய கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? ஒன்றில் இந்த விடயத்திலிருந்து முற்றிலுமாக வெளியேற வேண்டும். அல்லது தாங்கள் கோரும் தீர்வுக்காக ஜனநாயக ரீதியில் போராட வேண்டும். தங்களுடைய கட்சி ஆதரவாளர்கள் சிலரை அழைத்து பதாதைகளை உயர்த்திப் பிடிக்கும் போராட்டமல்ல – இலட்சக்கணக்கான மக்களை திரட்டி தங்களின் சுகபோகங்களை இழந்துபோகும் வகையிலான போராட்டமாக இருக்க வேண்டும்.

வடக்கு – கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தங்களின் கொழும்பு வாழ்வை முற்றிலுமாகப் புறக்கணிக்கும் போராட்டமாக இருக்க வேண்டும். ஆந்திராவில் பொட்டி சிறிராமுலு உயிர் நீங்கும் வரையில் போராடியது போன்று போராட வேண்டும். ஆந்திர தனி மாநிலக் கோரிக்கையை முன்வைத்து போராடிய ராமுலு இறந்து மூன்றே தினங்களில் புதிய ஆந்திர மாநிலத்தை நேரு அரசாங்கம் அங்கீகரித்தது. அது போன்று தமிழரின் ஜனநாயக போராட்டத்தை கண்டு கொழும்பு கீழிறங்க வேண்டும் – கூடவே இந்தியா மற்றும் மேற்கு உலகும் தமிழரை நோக்கி திரும்ப வேண்டும். அப்படியானதொரு போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தயாராக இருக்கின்றனரா? இதனை இலக்காகக் கொண்டு மக்கள் திரள்வார்களா?

செல்வநாயகம் காலம் – அதன் பின்னர் அமிர்தலிங்கம் காலத்தில்கூட அவ்வாறானதொரு போராட்டம் இடம்பெறவில்லை. இந்த நிலையில் இப்போது இருப்பவர்களால் இப்படியானதொரு போராட்டத்தை கற்பனை செய்யக்கூட முடியாது.

இந்திய தூதுவருடன் அமெரிக்க தூதுவரிடம் பேசுவதிலும் பயனில்லை. அவர்களின் எல்லை என்னவென்பதை அவர்கள் கூறிவிட்டனர். இந்தியாவின் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. இந்தியாவின் நிலைப்பாட்டை சரியாகப் புரிந்து கொண்டே தனது புதுடில்லி பயணத்தை நிறைவுசெய்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயம் தொடர்பில் பேசி வருகின்றார். கட்சிகளின் முன்மொழிவு கோரப்படுகின்றது. 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்திலேயே இழுபறிகள் காணப்படும்போது அதனைத் தாண்டிச் செல்வது எவ்வாறு? இந்தக் கேள்விக்கு நமது பக்கத்திலிருக்கும் பதிலோ இலகுவானது – அதாவது, சர்வதேச அழுத்தம் புவிசார் அரசியல் – இவைகள் வாய்ப்பை வாரிவழங்கப் போகின்றது. அதனை பயன்படுத்திக் கொள்வதில்தான் விடயம் இருக்கின்றது. கடந்த 14 வருடங்களாக இவ்வாறான மந்திரத்தைத்தான் திரும்பத் திரும்ப சிலர் உச்சரித்து வருகின்றனர். ஆனால், அரசியல் உரையாடல்களோ 13ஆவது திருத்தச் சட்டத்தை தாண்டிச் செல்வதாகத் தெரியவில்லை.

# செம்மலை நீராவியடி பிள்ளையார் பொங்கல் திருவிழா நேற்று நடந்தது!

முல்லைத்தீவு, ஓக. 05

பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

இதன்போது பாரம்பரிய முறைப்படி கோட்டைக் கேணி பிள்ளையார் ஆலயத்திலிருந்து மட்பாண்டம் எடுத்துவரப்பட்டு திருவிழா நடைபெற்றது.

பிரதம குருவாக திருஞானசம்பந்த குருக்கள், ஆலய பூசகர் சிவபாதன் கணேசபுவன் ஆகியோர்களால் காலை 8 மணியளவில் விஷேட அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து 11.30 மணியளவில் விநாயக பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட பூஜைகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது.



நேற்றைய திருவிழாவை முன்னிட்டு ஆலய வளாகத்தில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இன்று சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் பரிகலம் வழிவிடுதல் நிகழ்வு நடைபெற்று பொங்கல் திருவிழா நிறைவுறும்.

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தை ஆக்கிரமித்து விகாரை அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, பிள்ளையார் ஆலயத்துக்கு பல இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## ஒலிப்பேழை, நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 05

யானைத் தாத்தா தேவன் பூதனார் என்ற புனைபெயரில் சிறுவர் இலக்கியம் படைத்துவரும் சிரேஷ்ட சட்டத்தரணியும் எழுத்தாளருமான சோ. தேவராஜாவின் 'வானம் எங்கள் வசம்ஷ' என்ற தலைப்பிலான ஒலிப் பேழை, நூல் மற்றும் 'சாதனா ஆடுறா' என்ற நூல் ஆகியவற்றின் வெளியீட்டு அரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் நடைபெறவுள்ளது.

கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் புகழ் பெற்ற கலைஞரும் எழுத்தாளருமான வயிரமுத்து திவ்வியராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், அறிமுகவுரைகளை எழுத்தாளரும் கலைஞரும், ஆசிரியருமான சிறீலேக்கா பேரின்பகுமார், கட்டட வடிவமைப்பாளர் குமாரலிங்கம் பதீதரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

விசேட கலை நிகழ்வாக ம. ஆனந்த் அவர்களின் இசையமைப்பில் வானம் எங்கள் வசப்படும் என்ற தலைப்பிலான இசைப்பா அரங்கும் நடைபெறவுள்ளது. நிகழ்ச்சி தொகுப்பை வசந்தம் வானொலி அறிவிப்பாளரான பரமசிவம் டார்வினுடன் இணைந்து ஜனனி ஜெகராசா மேற்கொள்ளவுள்ளார்.

## மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா எழுதிய காலநிலை மாற்றம், அனர்த்த முகாமைத்துவம், Hydroclimate of northern Sri Lanka ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக்கழக திட்டமிடல், புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வராஜா ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி சி. ரகுராம், யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு வடக்கு பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் ஏ. ஜெகதீசன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ-ரி)

## விளையாட்டு போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்!

யாழ்ப்பாணம், ஓக. 05

கோண்டாவில் நாராயணா மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு, கலைநிகழ்வுகளும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.


மாதர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவி இ. கீதா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக விவாகப் பதிவாளர் திருமதி வ. சோமசூரியசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக லங்கா திறன் அபிவிருத்தி நிலைய பொறுப்பதிகாரி அ. திலீபன் பங்கேற்கவுள்ளார்.

இதில், சிறுவர் மற்றும் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு, கலாலயா மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்வு, பட்டிமன்றம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

(ஐ -ரி)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஓகஸ்ட் - 05 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 20
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திதித்துவயம்




**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலிதமாகும். மதிப்புக் கூடும்.

**இடபம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன விஷயங்கள் முடியும்.மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களை எல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உயரதிகாரிகள் உங்களை குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களின் அரவணைப்பில் இருப்பீர்கள். சகஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**கன்னி**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் ராஜ தந்திரத்தால் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புது சலுகைகள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். சக ஊழியர்கள் வேலைகளை விரைந்து முடிப்பார்கள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டு கொடுத்துப் போங்கள்.

# கச்சதீவை மீளப் பெறுவதற்கு தொடர்ந்து வலியுறுத்துகிறோம்!

## அண்ணாமலை சொல்கிறார்

சென்னை, ஓக. 05

கச்சதீவை மீட்குமாறு அரசாங்கத்திடம் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருவதாக பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

என் மண், என் மக்கள் என்ற தொனிப்பொருளில் பாதயாத்திரையை மேற்கொண்டு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.



2004 முதல் 2014ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில், 85 தமிழக கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

எனினும், தற்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் அவ்வாறான எந்தவொரு பாதகமான செயல்பாடும் இடம்பெறவில்லை.

இந்தநிலையில், இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீளப் பெறுவதற்கு மத்திய அரசாங்கத்திடம் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருவதாக அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# காவிரியிலிருந்து உரிய நீரை திறக்க கர்நாடாகாவுக்கு உத்தரவிடவேண்டும்!

## பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம்

சென்னை, ஓக. 05

விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க காவிரியிலிருந்து உரிய நீரை திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடிக்காக காத்திருக்கும் நெல் பயிரைக் காப்பாற்றுவதில் காவிரி டெல்டா விவசாயிகள் எதிர்கொண்டுள்ள இக்கட்டான சூழ்நிலையை எடுத்துரைத்து, காவிரியிலிருந்து உரிய தண்ணீரைத் திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா, மாநிலத்தின் நெல் தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்வதாகவும், ஏற்கெனவே அரிசித் தட்டுப்பாட்டால், பாசுமதி அல்லாத அரிசி ஏற்றுமதிக்கு ஒன்றிய அரசு தடை விதித்துள்ள தற்போதைய சூழலில், காவிரி டெல்டாவில் தற்போது உள்ள குறுவை நெல் பயிரையும், தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் பிரதமர் நரேந்திர மோடி உடனடியாகத் தலையிட்டுக் காப்பாற்ற வேண்டும்.



அதோடு, உச்சநீதிமன்றம் நிர்ணயித்துள்ளபடி, தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய தண்ணீரை உடனடியாகத் திறந்துவிடவும், ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் ஏற்பட்ட பற்றாக்குறையைத் தீர்க்கவும் கர்நாடக அரசுக்கு பிரதமர் மோடி உரிய அறிவுரைகளை வழங்குவதோடு, இதனை உறுதி செய்வதற்குத் தேவையான அறிவுரைகளை ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்துக்கும் வழங்கிட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் சிறுபான்மையினரல்ல தமிழர்கள்!

சென்னை, ஓக. 05

மதம், சாதி என எல்லா அடையாளங்களையும் விட மொழி, இனம் தான் பெரும்பான்மை. எனவே, இங்கே இருக்கிற இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் தமிழர்கள். எனவே, இனிமேல் சிறுபான்மையினர் என்று யாராவது சொன்னால் அவர்களை அடிப்பேன் - இவ்வாறு கூறியுள்ளார் சீமான்.

சென்னையில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

இன்றைக்கு கணக்கில் அடங்காத மது, ஊழல்-லஞ்சம், கொலை-கொள்ளை, கனிம வளச்சுரண்டல் நடக்கிறது. இதையெல்லாம் சகித்து கொள்பவன் யார்?. இஸ்லாமும் கிறிஸ்தவமும் அநீதிக்கு எதிராகப் பிறந்தது. ஆனால், இன்றைக்கு நாட்டில் தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ்., பா.ஜ.க. என்று மாறி மாறி நடைபெறும் அநீதியான ஆட்சியை எப்படி சகித்துக் கொள்கிறீர்கள்?



நான் 2016, 2019ஆம் 2021 ஆம் ஆண்டு தேர்தலில் நின்றேன். ஆனால் நீங்கள் எனக்கு வாக்களிக்கவில்லை. நான் கோபப்படவில்லை. ஆனால், திரும்பவும் நீங்கள் இதே தவறை செய்வீர்கள் என்று தெரியும் போது எனக்கு கோபம் வருமா, வராதா?.

இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களுக்கு தி.மு.க., காங்கிரஸ் கட்சி செய்த ஒரே ஒரு நன்மையை சொல்ல முடியுமா? மதம், சாதி என எல்லா அடையாளங்களையும் விட மொழி, இனம் தான் பெரும்பான்மை. எனவே, இங்கே இருக்கிற இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் தமிழர்கள். எனவே, இனிமேல் சிறுபான்மையினர் என்று யாராவது சொன்னால் அவர்களை அடிப்பேன் - நான் வெறி கொண்டு விடுவேன்.

கட்சிகளில் சிறுபான்மை அணி என்று இருப்பதையும் வெறுக்கிறேன். அரசமைப்பு சட்டத்தில் சிறுபான்மை என்று சொல்வதை எதிர்க்கிறேன். மதத்தின் அடிப்படையில் மனிதர்களின் எண்ணிக்கையை கணக்கிடுவது தவறு. மதம் மாறிக் கொள்ள கூடியது. மொழி, இனம் மாறிக் கொள்ள முடியாது - என்றார். (ஐ)

# மக்களுக்கு துரோகம் செய்தோரே ஈ.பி.டி.பியை விமர்சிக்கின்றார்கள்!

## ஊடகப் பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக. 05

**மக்களுக்கு துரோகத்தனத்தை புரிந்துவிட்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் எமது கட்சியை விமர்சிக்கின்றார்கள் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளருமான ஐ.சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார்**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் தேர்தல் காலத்தில் மக்களுக்கு உண்மையான அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்துத்தான் போட்டியிடுகின்றோம்

எங்கள் நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனங்களில் வெளியிட்டிருக்கின்றோம்.

அந்த வகையில் நாங்கள் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றபோது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எங்களுக்கு எதிரான கருத்துக்களைக் கூறுவது என்பது ஏற்க முடியாது.

உண்மையில் மக்களை ஏமாற்றும் துரோகங்களை புரிந்தவர்கள் என்றால் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸுக்கு அது ஒரு கைவந்த கலை.

மலையக மக்களின் வாக்குரிமையை-பிரஜாவுரிமையை பறிப்பதற்காக அன்றைய ஆட்சியாளர்களுடன் சேர்ந்து ஜி.ஜி.பொன்னம்பலமும் பி.குமாரசாமியும் ஈடுபட்டு அதற்கு கைமாறாக அமைச்சுப் பதவினையும் பொறுப்பேற்றனர்.

அவ்வாறு ஒரு துரோகத்தனத்தைச் செய்தவர்கள் தான் இன்று எமது கட்சியின் நிலைப்பாட்டை பற்றி பேசுகின்றார்கள். அதே போல் தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை ஆரம்பப்புள்ளியாக கொண்டு நாம் தீர்வை முன்னெடுக்கின்றபோது 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக நிராகரிப்பதாகச் சொல்கின்றார்கள். ஆனால் அவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு உள்ளே இருக்கும் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்டு மாநகர முதல்வராக, உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக இருந்தார்கள்.

அதேபோல ஒற்றை ஆட்சிக்குள் இருக்கின்ற பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணத்தை எடுத்து பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார்கள்.

மக்களுக்கு இவ்வாறு துரோகம் செய்கின்றவர்கள்தான் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்பதனை நாங்கள் தெளிவாகச் சொல்ல விரும்புகின்றோம்.



நாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் மக்களுக்கு தெளிவான அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்து தேர்தல் விஞ்ஞானத்தை வெளியிட்டுத்தான் மக்கள் எமக்கு ஆணை வழங்கியிருந்தனர்.

எனவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கும் கருத்தினை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம்-என்றார்.

(அ-2)

# சிவாஜிக்கு அழைப்பாணை

கிளிநொச்சி, ஒக. 05

முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும், தமிழ் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு கிளிநொச்சி பொலிஸாரால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் ஒப்பமிட்டு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டு ஒப்பமிடப்பட்டு குறித்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

சட்ட முறையற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்துகொண்டமைக்காகவே அழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள எதிர்வரும் 07ஆம் திகதி வழக்குக்காக சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நாட்டில் உணவு வீணடிப்பினால் உணவுப்பொருள் விலை உயர்வு

கொழும்பு, ஒக. 05

நாட்டில் உணவுப்பொருட்கள் வீணடிக்கப்படுவதனால் உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் புத்தி மாரம்பே உள்ளிட்ட நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை நேற்று முன் தினம் கண்டியில் வைத்து விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# கடிதம் எழுதி வைத்துவிட்டு உயிரை மாய்த்த வைத்தியர்

கொழும்பு, ஒக. 05

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் 42 வயதான வைத்தியர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

வெலியாய பகுதியில் அமைந்துள்ள குறித்த வைத்தியரின் பிரத்தியேக இல்லத்திலேயே அவர் உயிரை மாய்த்துள்ளார்.

குறித்த வைத்தியர் தற்கொலை செய்துக்கொள்வதற்கு முன்னதாக கடிதம் ஒன்றை எழுதி வைத்துள்ளார்.

தன்னுடைய இந்த தற்கொலைக்கு எவரையும் சந்தேகிக்க வேண்டாம் எனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# ஆதிவாசிகளின் தலைவரை சந்தித்தார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, ஒக. 05

ஆதிவாசிகளின் தலைவர் சுதா வன்னில அத்தோ பிரதமர் தினேஸ் குணவர்தன மொனராகலையில் சந்தித்தார்.

காட்டின் இயற்கைச் சூழலில் உற்பத்தியாகும் தேன், பழங்கள், மருந்து மூலிகைகள், நன்னீர் மீன் வளர்ப்பு போன்ற வருமான மூலங்களின் சில சட்டங்கள் மற்றும் பல காரணங்களால் முடங்கியுள்ளமை குறித்தும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வசதிகள் இல்லாமை குறித்தும் ஆதிவாசிகளின் தலைவர் பிரதமரிடம் தெரிவித்தார்.

ஊருவரிகே வன்னில அத்தோ தலைமையில் அனைத்து ஆதிவாசி குடியேற்றங்களின் தலைவர்களுடன் பிரதமரை சந்தித்து இந்தப் பிரச்னைகள் குறித்து விரிவான முறையில் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஒக. 05

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற சந்தேக நபர் ஒருவர் வெலிபென்ன பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை குற்றவியல் விசாரணை பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இதன்படி, கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து 500 கிராமுக்கும் அதிகளவான ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் 21 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# கடன் சீரமைப்பு செயல்பாடு செப்ரெம்பரில் நிறைடையும்

கொழும்பு, ஒக. 05

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வுக்கு இணங்க, கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளை நிறைவு செய்ய இலங்கை உத்தேசித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவின் சி.பி.ஏ நிறுவகத்த இலங்கையில் நிறுவும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

"நாங்கள் ஆரம்பித்துள்ள பரந்த மற்றும் நீண்ட கால சீர்திருத்தங்கள் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான தெளிவான அறிகுறிகளைக் காட்டுகின்றன. பொதுச் செலவினங்களை திறம்பட நிர்வகிக்க அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. இருப்பினும், நமக்கு முன்னால் ஒரு நீண்ட பயணம் உள்ளது" என அவர் தெரிவித்தார். (அ)

# நீர் மின்சாரத்தால் தென் மாகாணத்தில் 65,000 விவசாயக் குடும்பங்கள் பாதிப்பு

## பிரதிச் சபாநாயகர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 05

மின் உற்பத்திக்கு தேவையான நீரை சேமிப்பதற்காக சமனல நீர்த்தேக்கத்தில் இருந்து உடவளவ பகுதி விவசாய நிலங்களுக்கான நீர் விநியோகத்தை அரசாங்கம் தடை செய்துள்ளது. இதனால் தென்மாகாணத்தில் விவசாயத்தில் ஈடுபடும் 65 ஆயிரத்துக்கும் அதிகமான விவசாய குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் பிரதிச் சபாநாயகருமான அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உடவளவ பிரதேச விவசாயிகள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் அதிருப்தியளிக்கின்றன.

மின்சாரத்தை குறுகிய காலத்துக்குள் உருவாக்க முடியும். ஆனால் நெற்பயிர்ச்செய்கைக்கு மூன்று மாதங்களேனும் செல்லும்.

ஆகவே சோறு உண்பவர்கள் அறிவுபூர்வமாக தீர்மானம் எடுத்து சமனல அணையில் இருந்து விவசாயத்துக்கு நீரை விடுவிக்க வேண்டும்.

மின்சாரத்தை ஒரு சில மணித்தியாலங்களில் உற்பத்தி செய்யலாம். ஆனால் விவசாயத்தை குறுகிய காலத்துக்குள் மேற்கொள்ள மேற்கொள்ள முடியாது.

நெல் பயிர்ச்செய்கைக்கு குறைந்தபட்சம் 3 மாதங்களேனும் செல்லும்.

நீர் மின்னுற்பத்திக்காக விவசாய நிலங்களுக்கு நீர் விடுவிப்பது தடுக்கப்பட்டுள்ளமை முறையற்றதொரு செயற்பாடாகும்.

விவசாயத்துக்கு தேவையான நீரை விடுவிக்காமல் இருப்பதால் உடவலவ பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் அதிருப்தியளிக்கின்றன.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பிரச்னை குறித்து பேசப்பட்டுள்ளபோதும் அதற்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை.

மின்சாரத்தை எப்போதும் உற்பத்தி செய்யலாம். ஆனால் விவசாயத்தை விரும்பும் நேரத்தில் மேற்கொள்ள முடியாது.

ஆகவே சோறு உண்பவர்கள் அறிவார்ந்த ரீதியில் சிந்தித்து சமனல நீர்த்தேக்கத்தில் இருந்து உடவளவ பிரதேச விவசாய நிலங்களுக்கு நீரை விடுவிக்க வேண்டும்-என்றார். (அ)

# முஜிபுர், காவிந்தவுக்கு எதிராக முறைப்பாடு!

கொழும்பு, ஒக. 05

பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோருக்கு எதிராக மருதானை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்துக்குள் சட்டவிரோதமாக நுழைந்து அதன் அதிகாரிகளை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல் இது தொடர்பான முறைப்பாடு, குறித்த அதிகார சபையின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியால் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட சிலர் தேசிய போதைப் பொருள் ஒழுங்குமுறை அதிகார சபைக்குள் சட்டவிரோதமாக நுழைந்து அனுமதியின்றி தரவுகளைப் பெற்றுள்ளதாக முறைப்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சபாநாயகரின் முன்னறிவிப்பு இன்றி பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறுவனங்களுக்குள் நுழைந்து தரவுகளை பெற்றுக் கொள்ள முடியாது எனவும் இந்த சட்டவிரோத நடைமுறைக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, சுகாதார அமைப்பில் இடம்பெற்றுள்ள பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல்களை வெளிப்படுத்திய மையினால் தாம் உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் சுகாதாரக் குழு உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார். (அ)

# கடன் மறுசீரமைப்பின் பின்னர் ரூபா பெறுமதி நிலைபெறும்!

## மத்திய வங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 05

**நாட்டின் பொருளாதாரம் சிறந்த முறையில் முன்னோக்கி நகர்வதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

**வெளிநாட்டுச் செயலாற்றத்தின் அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தமையே இதற்குக் காரணம் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.**

இந்த ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் எதிர்மறையான தாக்கத்தை கொண்டிருந்தாலும் மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் சாதகமாக இருக்கும் என இலங்கை மத்திய வங்கி எதிர்வு கூறியுள்ளது.

ஜூலை மாதத்தில், பணவீக்கம் 6.3 ஆக காணப்பட்டது.

இந்தநிலையில், 4 இற்கும் 6 இற்கும் இடைப்பட்ட அளவில் உள்ள பணவீக்கத்தை மாத்திரமே இலங்கையால் தாங்கிக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், கடன் மறுசீரமைப்பு செயன்முறை நிறைவடைந்ததன் பின்னர் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நிலையான மட்டத்தில் இருக்கும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது சமர்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை ஆராய்ந்த பின்னர், அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கான விண்ணப்பங்களை கோர நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். (அ)

# பூஜித் ஜயசுந்தர கடமை தவறினார்

## கூறுகிறார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஓக. 05

போதியளவு தகவல்கள் கிடைத்திருந்தும் ஏப்ரல் 21 தாக்குதலை தடுக்க தவறியமை தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, தமது கடமையை செய்யத் தவறியுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் உயர்நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

குறித்த குற்றச்சாட்டுக்களில் பூஜித் ஜயசுந்தரவை குற்றமற்றவராக கருதி கொழும்பு மேல் நீதிமன்றின் மூவரங்கிய நீதிபதிகள் குழாம் வழங்கிய தீர்ப்பை வலுவிழக்குமாறு கோரி சட்டமா அதிபரினால் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு விசாரணைகளுக்காக நேற்று முன் தினம் அழைக்கப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நாவான இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவும் குற்றமற்றவர்களாக அறிவித்து கொழும்பு மேல் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டமை முறையற்றது என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இதன்போது மன்றில் கூறினார். (அ)

# இருளில் மூழ்கியது ரஜமஹா விகாரை!

## மின்சாரம் துண்டிப்பால்

கொழும்பு, ஓக. 05

மிஹிந்தலை ரஜமஹா விகாரையில் 41 இலட்சம் ரூபா மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாமையால் நேற்று முன் தினம் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அனுராதபுரம் மாவட்ட பிரதேச மின் பொறியியலாளர் சமுத்திரநாத ஜயவர்தன இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

மிஹிந்தலை ரஜமஹா விகாரையில் தூபி நிர்மாணம் போன்ற பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த வேளையிலேயே இந்த மின்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மிஹிந்தலை ரஜமஹா விகாரை பீடாதிபதி பூஜ்ய வளவ ஹங்குனவே தம்மரதன தேரர் குறிப்பிட்டார். (அ)

# இன்சுலின் இறக்குமதி செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஓக. 05

அரச வைத்தியசாலைகளில் இன்சுலினுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்சுலின் விநியோகத்திற்கான விலைமனுக் கோரலை வழங்கிய விநியோகஸ்தர்கள் போதியளவான இன்சுலினை வழங்காமையினால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதன் காரணமாக வேறு இரு விநியோகஸ்தர்கள் ஊடாக இன்சுலினை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், ஏனைய வைத்தியசாலைகளில் நிலவும் இன்சுலின் தட்டுப்பாட்டை தடுக்கும் வகையில் இன்சுலின் அடங்கிய 50,000 பொதிகளை அவசரமாக இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இவை நாட்டுக்கு கிடைக்குமெனவும் அவர் கூறினார்.

நீரிழிவு நோயாளர்கள் பலர் தமது வாழ்வை முன்கொண்டு செல்வதற்கு வைத்தியசாலைகளில் வழங்கப்படும் இன்சுலின் முக்கியமானதாகும்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினால் வைத்தியசாலைகளில் இன்சுலின் விநியோகத்தில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. (அ)

# லிட்ரோ எரிவாயுவின் விலை மாற்றமில்லை

கொழும்பு, ஓக. 05

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என அதன் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளமையினால் நேற்று லிட்ரோ எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படும் என அவர் முன்னதாக அறிவித்திருந்தார்.

எனினும், முன்னதாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட எரிவாயு கையிருப்பில் உள்ளமையால் தற்போதைய நிலையில் விலையை அதிகரிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போதைய விலையில் லிட்ரோ சமையல் எரிவாயு தொடர்ந்தும் விற்பனை செய்யப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 2 ஆயிரத்து 982 ரூபாவாகும்.

அதேநேரம், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு ஆயிரத்து 198 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன் 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 561 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மேலும் 300 பொருட்களுக்கு இறக்குமதித் தடை நீக்கம்!



கொழும்பு, ஓக. 05

மேலும் 300 பொருட்களுக்கான இறக்குமதி தடை அடுத்த மாத நடுப்பகுதியில், நீக்கப்படும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கேகாலை பொல்பிட்டிய பகுதியில் நேற்று காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக ஒரு வருடத்துக்கு முன்னதாக சுமார் ஆயிரத்து 100 பொருட்களுக்கான இறக்குமதி தடை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும், புதிய பொருளாதார போக்குகளுடன் முன்னதாக இரண்டு சந்தர்ப்பங்களில் தலா 300 பொருட்களுக்கான இறக்குமதி தடையை நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பதவி விலகுமாறு என்னை எத்தரப்பும் கோரவில்லை

## கூறுகின்றார் கெஹலிய

கொழும்பு, ஓக. 05

சுகாதார அமைச்சரைப் பதவி விலகுமாறு கோரப்பட்டதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை பதவி விலகுமாறு கோரப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் இது குறித்து சுகாதார அமைச்சரை தொடர்பு கொண்டு கேட்டபோது, என்னை பதவி விலகுமாறு எவ்வித கோரிக்கையும் எத்தரப்பினராலும் விடுக்கப்படவில்லை என குறிப்பிட்டார். (அ)

# விரிவுரையாளர்களுக்கு கடுமையான தட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 05

ஓய்வு பெற்ற மற்றும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வெற்றிடங்களை நிவர்த்திப்பதற்கான புதிய ஆட்சேர்ப்பு முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.



குறித்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வெற்றிடங்களை கணிப்பிட்டதன் பின்னர் முறையாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல்கலைக்கழக கட்டமைப்பில் விரிவுரையாளர்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வைத்திய நிபுணர்களுக்கு முல்லையில் பற்றாக்குறை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

முல்லைத்தீவு, ஓக. 05

**முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை நிலவுவதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு குறையாக உள்ளது. குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கையில் உள்ள வைத்திய நிபுணர்கள் பலர் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர்.

இறுதியாக நடைபெற்ற கலந்துரையாடலில் இரண்டு வைத்தியசாலைகளுக்கும் இரண்டு வைத்தியர்களையாவது நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டபோது பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சுகாதார அமைச்சரும் இருந்தார்.

அதனை நாங்கள் தற்போது தொடர்ந்து கேட்கின்றோம். எதிர்வரும் காலத்தில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

விசேட ஆளணி எங்களுக்கு தேவையாக உள்ளது. நிதி அமைச்சு புதிய ஆளணியை நியமிக்காத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. உள்ளக கட்டமைப்பிலும் விரைவான அபிவிருத்தி தேவையாகவுள்ளது. அதற்கு திட்டம் ஏதாவது இருந்தால் மேற்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

கொழும்பு, ஓக. 05

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையால் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வெப்பநிலை அதிகரித்துள்ள நிலையில், நீரின் தேவை அதிகரித்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும் என சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த சில நாட்களாக பல நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைந் துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்த போதிலும், வரையறுக்கப்பட்ட நீரை நிர்வகிக்க வேண்டியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர் மின் உற்பத்திக்கு நீரை திறந்து விடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், பயிர்களைப் பாதுகாக்க நீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வரை போதிய மழை பெய்யாது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு இலங்கையில் போதிய மழையைப் பெறவில்லை.

ஆண்டுதோறும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அதிக மழை பதிவாகும்.

மேலும், வறட்சி காரணமாக உடவலவ நீர்த்தேக்கம் உட்பட பல நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக குறைவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இரண்டு பிள்ளைகளின் தந்தை வீட்டில் வைத்து சுட்டுக்கொலை!

கொழும்பு, ஓக. 05

குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை - இலங்காபுரம் பிரதேசத்தில் நேற்று காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இலங்காபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆர்.சமரக்கோன் (வயது 42) என்பவரே வீட்டில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் கொண்ட குழுவே குறித்த குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பியோடியுள்ளது.

சம்பவ இடத்திலேயே உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் மரணிக்கும் சிசுக்களைத் தகனம் செய்வதில் மெத்தனம்!

கிளிநொச்சி, ஓக. 05

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நிகழும் சிசு மரணங்கள் தொடர்பில், மரணத்துக்கு பிந்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில் நிகழும் தாமதங்கள் காரணமாக சிசுக்கள் தகனம் செய்யப்படுவதில் தாமதம் நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், பெற்றோர் பலர் அதிருப்தி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மரணத்திற்கு பிந்தைய பரிசோதனைகளை மேற்கொள்வதில் அசமந்தமாகச் செயற்படுவதே இந்த தாமதத்தின் காரணம் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதும், கிளிநொச்சி வைத்தியசாலை பிரேத அறையில் சில சிசுக்களின் சடலங்கள் பாதுகாக்கப்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

இது தொடர்பில் மாகாண சுகாதார அதிகாரிகள் தலையிட்டு, கிளிநொச்சி வைத்தியசாலையில் மரணிக்கும் சிசுக்களை விரைவாக தகனம் செய்ய வழியேற்படுத்த வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து லொறியுடன் மோதிய ஓட்டோ!

## இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 05

பதுளை - கொழும்பு பிரதான வீதியில் பெல்மடுல்ல - ரில்லேன பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி - பலாங்கொடை, பல்லெபெத்த பகுதியை சேர்ந்த 53 மற்றும் 59 வயதான இருவரே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரும் பயணித்த முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் வந்த லொறியுடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான முச்சக்கர வண்டியின் சாரதியும் முச்சக்கரவண்டியில் பயணித்தவரும் கஹவத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

பெல்மடுல்ல பொலிஸ் நிலைய போக்குவரத்து அதிகாரிகள் லொறியின் சாரதியை கைது செய்துள்ளதுடன், விபத்து தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவத்துக்கான மின்சார கட்டணம் இதுவரை செலுத்தப்படவில்லை

கொழும்பு, ஓக. 05

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவத்திற்காக இலங்கை மின்சார சபை விநியோகித்த மின்சாரத்திற்கு செலுத்தவேண்டிய தொகை இன்னும் செலுத்தப்படவில்லை என மின்சார சபை தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விடுத்த கோரிக்கைக்கு அமைய இலங்கை மின்சார சபை இந்த தகவலை வழங்கியுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு வழங்கிய இந்த தற்காலிக மின் விநியோகத்திற்காக 26 லட்சம் ரூபாவுக்கும் மேல் செலுத்தப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபை, நளின் ஹேவகேவுக்கு வழங்கியுள்ள பதிலில் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் கோரிக்கைக்கு அமைய கடந்த 2019 ஆண்டு 9 ஆம் மாதம் 15 ஆம் திகதி வீரகெட்டிய வீட்டில் நடந்த வைபவத்திற்கு வழங்கிய தற்காலிக மின் விநியோகத்திற்காக 26 லட்சத்து 82 ஆயிரத்து 246.57 ரூபா செலுத்தப்படவேண்டும் என இலங்கை மின்சார சபை கூறியுள்ளது. (அ)

# பால் பொருட்கள் தேவை அதிகரிப்பு ஆயினும் தினசரி உற்பத்தி குறைவு!

கொழும்பு, ஓக. 05

கால்நடைகளுக்கு சரியான ஊட்டச்சத்து இல்லாமை, கால்நடை தீவனத்தின் விலை உயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் தினசரி பால் உற்பத்தி குறைந்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான பிரதான உள்ளூர் பால் நிறுவனமான மில்கோ, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை மற்றும் தனியார் துறைக்குச் சொந்தமான பெல்வத்த பால் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் நடத்திய கலந்துரையாடலில் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாளாந்த பசும்பால் தேவை 12 இலட்சம் லீற்றராக இருந்த போதிலும் நாளொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் அளவு 5 இலட்சம் முதல் 6 இலட்சம் லீற்றர் என விவசாய அமைச்சின் கால்நடைப் பிரிவு தெரிவித்துள்ளது.

பெல்வத்த பால் நிறுவனத்தின் தலைவர் ஆரியசீலி விக்கிரமநாயக்க இது தொடர்பில் கூறுகையில்,

தற்போது தனது தொழிற்சாலையில்திரவ பாலை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் 500 மெற்றிக் தொன் முழு கொழுப்புள்ள பால் மாவை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசிய கால்நடை மேம்பாட்டு வாரியம் கடந்த ஆறு மாதங்களில் பசுவின் பால் உற்பத்தியை 2,599,617 லீற்றராகவும், மில்கோ நிறுவனம் 19,152,766 லீற்றராகவும் பால் உற்பத்தியை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை 30 சதவீதம் அதிகமாகும் என்று பால் உற்பத்தி நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன. (அ)

# இந்தியா அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்து உலகளாவிய உணவு நெருக்கடிக்கு வழி வகுத்துவிட்டதா?



உலகமெங்கும் பல கோடி மக்களின் அன்றாடத் தேவையாக அரிசி விளங்குகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருளாக விளங்கும் அரிசியின் ஏற்றுமதிக்கு இந்தியா விதித்துள்ள தடை, அந்த கோடிக்கணக்கான மக்களிடையே என்ன மாதிரியான பாதிப்புகளை ஏற்படுத்தும்? இந்தக் கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

உள்நாட்டில் உயர்ந்து வரும் அரிசியின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பாஸ்மதி அல்லாத வெள்ளை ரக அரிசி ஏற்றுமதிக்கு கடந்த மாதம் இந்தியா தடை விதித்தது.

இந்தத் தடையால் அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகளில் வாழும் பொது மக்கள் பீதியடைந்து, அங்குள்ள மளிகைக் கடைகளில் அரிசி வாங்கக் குவிந்தனர்.

இதுதொடர்பான வீடியோக் கள் சமீபத்தில் வைரலாக, வெளி நாடுகளில் அரிசியின் விலை அதிரடியாக ஏற்றம் கண்டு வருகிறது.



ஆயிரக்கணக்கான அரிசி வகைகள் இந்தியாவில் பயிரிடப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இருப்பினும் பாஸ்மதி, இண் டிகா, ஐபோனிகா உள்ளிட்ட நான்கு ரகங்கள் தான் உலக அளவிலான அரிசி சந்தையில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இவற்றில் குறிப்பாக இண்டிகா ரக அரிசி உலக சந்தையில் பெரும் பங்கு வகிக்கிறது.

### உலகளாவிய அரிசி சந்தையில் டான்

அரிசி ஏற்றுமதியில் சுமார் 40 சதவீதம் பங்களிப்புடன் உலக சந்தையில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. தாய்லாந்து, வியட்நாம், பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகள் இதன் ஏற்றுமதியில் அடுத்தடுத்த நிலையில் உள்ளன.

சீனா, பிலிப்பைன்ஸ் , நைஜீரியா ஆகியவை அரிசி இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாகத் திகழ்கின்றன. இந்தேஉனீசியா, வங்கதேசம் போன்ற நாடுகள், உள்நாட்டு சந்தையில் பற்றாக்குறை ஏற்படும்போது மட்டும் அரிசியை இறக்குமதி செய்யும் நடைமுறையைக் கொண்டுள்ளன.

ஆப்பிரிக்காவில் அரிசி நுகர்வு அதிகரித்து வருகிறது. கியூபா, பனாமா போன்ற நாடுகளில் அரிசி முக்கிய உணவுப் பொருளாக இருந்து வருகிறது.

உலக அளவிலான அரிசி ஏற்றுமதி 56 மில்லியன் தொன்கள் என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில், கடந்த ஆண்டு இந்தியா மட்டும் 140 நாடுகளுக்கு 22 மில்லியன் தொன்கள் அரிசியை ஏற்றுமதி செய்திருக்கிறது. இதில் ஆறு மில்லியன் தொன்கள் அரிசி, ஒப்பீட்டளவில் மலிவான இண்டிகா ரக அரிசியாகும்.



அதாவது, உலக அரிசி சந்தையில் சுமார் 70 சதவீதம், இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் இண்டிகா ரக அரிசி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்நிலையில் இந்த வகை அரிசி ரகங்களின் ஏற்றுமதிக்கு இந்தியா தற்போது தடை விதித்துள்ளது.

முன்னதாக, உடைக்கப்பட்ட அரிசி ஏற்றுமதிக்கு கடந்த ஆண்டு இந்தியா தடை விதித்தது மட்டுமல்லாமல், உலகின் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பாஸ்மதி அல்லாத அரிசி வகைகளுக்கு 20 சதவீதம் வரியும் விதித்தது.

### சர்வதேச நாணய நிதியம் அச்சம்

அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா தற்போது விதித்துள்ள தடையின் விளைவாக, சர்வதேச சந்தையில் அதன் விலை அதிரடியாக உயரக் கூடும் என்ற அச்சம் பல்வேறு தரப்பினர் மத்தியில் ஏற்பட்டுள்ளதில் வியப்பேதும் இல்லை.

“அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா விதித்துள்ள தடையால், உலக நாடுகளில் தானியங்களின் விலை இந்த ஆண்டு 15 சதவீதம் வரை உயரக்கூடும்” என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை பொருளாதார நிபுணரான பியர் ஒலிவியே கொரின்சஸ் அண்மையில் அச்சம் தெரிவித்திருந்தார்.

மேலும், இந்தியாவின் இந்தத் தடை குறிப்பாக சாதகமான நேரத்தில் வரவில்லை என்று ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சந்தை ஆய்வாளரான ஷெர்லி முஸ்தபா கூறியுள்ளார்.

### அரிசி விலை ஏற்றம் கண்டதற்கான காரணங்கள்

சர்வதேச சந்தையில் கடந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து சீராக உயர்ந்து வந்த அரிசியின் விலை, கடந்த ஜூன் மாதத்தில் இருந்து 14 சதவீதம் அளவுக்கு அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் பெய்து வரும் சீரற்ற பருவமழை, பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு என தெற்காசியாவில் நிலவி வரும் சமச்சீரற்ற பருவநிலை, சர்வதேச சந்தையில் அரிசி விநியோகத்தைப் பாதித்துள்ளது. அத்துடன், உரங்களின் விலை உயர்வு நெல் சாகுபடிக்கான செலவை அதிகரித்துள்ளது.

**அரிசி ஏற்றுமதியில் சுமார் 40 சதவீதம் பங்களிப்புடன் உலக சந்தையில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. தாய்லாந்து, வியட்நாம், பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகள் இதன் ஏற்றுமதியில் அடுத்தடுத்த நிலையில் உள்ளன.**

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை, பல நாடுகளில் அரிசிக்கான இறக்குமதி செலவை அதிகரிக்க வழிவகுத்தது. அதேநேரம் பணவீக்கம் அதிகரிப்பு, சர்வதேச சந்தையில் அரிசி வர்த்தகத்தின் செலவை உயர்த்தி உள்ளது.

“அரிசி இறக்குமதியாளர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை உள்ளது. ஆனால், இதன் விளைவாக அரிசியின் விலை மேலும் அதிகரித்தால் அதை சர்வதேச நுகர்வோர் சமாளிப்பார்களா என்பதைப் பார்க்க வேண்டும்,” என்கிறார் சந்தை ஆய்வாளரான முஸ்தபா.

### அரிசியில் உள்ள அரசியல்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள தானிய சேமிப்புக் கிடங்குகளில், சுமார் 41 மில்லியன் தொன் அரிசியை இந்தியா கையிருப்பில் வைத்துள்ளது. இது அதன் தேவையைவிட மூன்று மடங்கு அதிக அளவாகும்.



அத்துடன் பொது விநியோக திட்டத்தின் மூலம், நாடு முழுவதும் சுமார் 700 மில்லியன் ஏழை மக்களுக்கு அரிசியை மாதந்தோறும் இந்தியா விநியோகம் செய்து வருகிறது.

இருப்பினும் கடந்த ஓராண்டுக்கும் மேலாக இந்தியா உணவுப் பொருள் விலையேற்றத்தை எதிர்கொண்டு வருகிறது. இதன் விளைவாக கடந்த ஆண்டு அக்டோபர் முதல், உள்நாட்டு சந்தையில் அரிசியின் விலை 30 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது.

அடுத்த ஆண்டு இந்தியாவில் நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் மற்றும் இந்த ஆண்டு இறுதியில் ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளன.

இந்நிலையில், பொதுமக்களின் முக்கிய அத்தியாவசிய தேவையான அரிசியின் விலை ஏற்றம் இந்திய அரசின் மீது அரசியல்ரீதியான அழுத்தத்தை ஏற்படுத்தும் என்பதுடன், அதைச் சமாளிப்பதும் அரசுக்கு சவாலாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

### தடைக்கான காரணங்கள்

“பாஸ்மதி அல்லாத அரிசி ரகங்களின் ஏற்றுமதிக்கு இந்தியா விதித்துள்ள தடை, அனேகமாக உள்நாட்டு சந்தையை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இருக்கலாம்.

அத்துடன் இந்த நடவடிக்கை தற்காலிமானதாக இருக்கும் என்றே தெரிகிறது,” என்கிறார் சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஜோசப் கிளாபர்.

எல் நினோ காலநிலை மாற்றம், நெல் அதிகம் பயிரிடப்படும் நாட்டின் தென் பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதன் விளைவாக இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் அரிசி உற்பத்தி பற்றாக்குறையை சமாளிப்பதற்கான முயற்சிகளை அரசு முன்னெடுத்துள்ளது என்கிறார் இந்தியாவைச் சேர்ந்த விவசாயக் கொள்கை வல்லுநரான தேவிந்தர் ஷர்மா.

### தடையை நீக்க வேண்டியதன் அவசியம் என்ன?



உலக உணவு பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள அரிசி ஏற்றுமதிக்கான தடையை இந்தியா நீக்க வேண்டும் என்பதே பல தரப்பினரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஏனெனில், சுமார் 42 நாடுகளின் மொத்த அரிசி இறக்குமதியில் 50 சதவீதத்துக்கு மேல் இந்தியாவின் பங்கு இருக்கிறது. மேலும் ஆப்பிரிக்க நாடுகளில் செய்யப்பட்டு வரும் அரிசி இறக்குமதியில் இந்தியாவின் சந்தைப் பங்கு 80 சதவீதத்தைத் தாண்டியுள்ளதாகக் கூறுகிறது சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம்.

வங்கதேசம், பூட்டான், கம்போடியா, இந்தோனீசியா, தாய்லாந்து, இலங்கை ஆகிய ஆசிய நாடுகளில் அரிசி நுகர்வு அதிகமாக உள்ளது. இந்த நாடுகளில் பொதுமக்கள் ஒரு நாளைக்கு உட்கொள்ளும் உணவு வகைகளில் இருந்து கிடைக்கும் மொத்த கலோரி மதிப்பில் அரிசியின் பங்கு மட்டும் 40 முதல் 67 சதவீதம் வரை உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# ‘அறிவிப்பின் சிகரம்’ விமல் சொக்கநாதன் பன்முக ஆளுமை மிகுந்த படைப்பாளி!






**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

இதுவரையில் விமல் சொக்கநாதனை அனைவரும் லண்டன் பி.பி.சி யின் தமிழோசையிலிருந்து ஒலிக்கும் காந்தக்குரல் அறிவிப்பாளர் என்றே பலரும் அறிந்திருப்பர். ஆயினும் அவர் பன்முக ஆளுமை மிகுந்த படைப்பாளியும் ஆவார்.

பத்தி எழுத்தாளராக, அறிவியல் ஆக்கவியல் எழுத்தாளராக அவரின் கூர்மையான எழுத்துக்கள் இலங்கையிலும், புலம் பெயர் நாடுகளிலும் பிரசித்தி பெற்றவை. இதுவரையில் மூன்று நூல்களை எழுதியுள்ளார். வானொலி ஒலிபரப்புக் கலை பற்றி “வானொலிக் கலை” என்ற நூலை சென்னையில் காந்தளகம் பதிப்பகம், மே 2007இல் வெளியிட்டது.


இதன் பின் மிக அண்மைக் காலத்தில் “லண்டனில் இருந்து விமல்” -வீரகேசரியில் வெளியான தொடர் கட்டுரைகளின் தொகுப்பு நூலும், “விமலின் பக்கங்கள்” - லண்டன் புதினம் வார இதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு நூலையும் விமல் படைத்துள்ளார்.


லண்டன் பி.பி.சி யின் தமிழோசையிலிருந்து விமல் சொக்கநாதன்...குப்பி விளக்கிலும், சைக்கிள் உருட்டி டைனமோவில் வானொலி கேட்ட யுத்தகாலப்பகுதியில் மிகப் பிரபலமான, அனைவரது மனதையும் ஈர்த்த புகழ்பெற்ற பிபிசி இலண்டன் வானொலியில் இருந்து ஒலிக்கும் காந்தக்குரல்.

இனி, இந்த கம்பீரக் குரலை கேட்க முடியாது என்ற போது- நம்ப முடியவில்லை !! இந்தத் தகவல் உண்மையாக இருக்கக் கூடாது என மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்க, தகவல் மேல் தகவலாக இலண்டனில் இருந்து தமிழ் முழங்கிய விமல் சொக்கநாதன் விண்ணேகிய செய்தி மனதை நெருடியது.

உலகப் புகழ்பெற்ற இலண்டன் பிபிசி வானொலியின் ஒலிபரப்பாளரும், தமிழ்ப்பத்திரிகைகளில் தொடர்ச்சியாக கட்டுரைகளை எழுதிவந்தவரும் தொழில் ரீதியாக சட்டத்தரணியுமாகிய விமல் சொக்கநாதன் இலண்டன் மாநகரில் அகால மரணத்தைத் தழுவினார் என்ற செய்தி காற்றலைகளில் சோகமாக வந்தது.

எண்பதுகளில் ஈழப் போர் உக்கிரமடைந்த காலத்தில் பிபிசி தமிழோசையே ஒரே ஒரு நம்பகத்தன்மை கொண்ட வானொலியாக இருந்து வந்தது. இலங்கை ஒலிபரப்புக்







கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை ஹலங்கா புவத்’ என்ற அரச செய்திச் சேவையின் பொய்ச் செய்திகளை ஒலிபரப்பியதும் இதற்கு ஒரு காரணம். போரின் நெருக்கடிகளிலும், மின்சாரமின்மை, மின்கலங்களுக்கு (பற்றறி) தடை என்பனவற்றுக்கு மத்தியிலும் சைக்கிள் டைனமோக்கள் மூலம் வானொலியை இயக்கி பி.பி.சி வானொலியை ஈழத்தமிழ்மக்கள் கேட்டுவந்தனர்.

தமிழோசையின் அப்போதைய பொறுப்பாளர் சங்கர் அண்ணா என அன்பாக அழைக்கப்படும் சங்கரமூர்த்தி, ஆனந்தி அக்கா என அன்பாக அழைக்கப்படும் மூத்த ஒலிபரப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம், விமல் சொக்கநாதன் ஆகியோர் அக்காலத்தில் மக்களின் பேரபிமானம் பெற்ற ஒலிபரப்பாளர்களாக இருந்தார்கள். இவர்களது குரலைக் கேட்க இரவு 9மணிக்கு வானொலியை சிற்றலை வரிசைக்கு திருப்புவது ஈழத்தமிழர்களது வழக்கமாகவிருந்தது.

ஒரு கலைக்குடும்பத்தின் ஊடாக இளம் வயதிலேயே கலைத்துறைக்கு வந்தவர். சிறுவர் மலர் நாடகங்களில் ஆரம்பித்து, மேடை நாடகங்களில் நிறைய நடித்தவர். விமல் சொக்கநாதன் சிறந்த வானொலிக் கலைஞர். இலங்கை வானொலியில் நீண்ட காலம் அறிவிப்பாளராக பணியாற்றியவர்.

இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்த பின்னர் பிபிசி தமிழோசையில் அறிவிப்பாளராக இருக்கும் இவரது குரல் பன்னாட்டு வானொலிகளிலும் ஒலித்தது.

இலங்கை வானொலியில் இவர் படைத்த இசையும் கதையும், வாலிப வட்டம் போன்ற நிகழ்ச்சிகள் புகழ் பெற்றவை. நகைச்சுவை கலந்து இவர் வழங்கிய களம் பல காண்போம் என்ற உலக அரசியல் ஆய்வு நிகழ்ச்சி பல அரசியல் தலைவர்களையே கவர்ந்தது.

அண்மையில் இலண்டன், பாரிஸ், சென்னை, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் அவரின் நூல்கள் வெளியிடப்பட்டு, நண்பர்களாலும் வாசகர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டவர் விமல் சொக்கநாதன். தமிழ் வானத்தின் ஒலி அலை ஓய்ந்து, வண்ணக் குரல் இனி முழங்காதோ என மனம் ஏங்குகிறது. ●

# இந்தியா அரிசி ஏற்றுமதிக்கு தடை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

“அரிசி ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை சாமானிய மக்களை மிகவும் பாதிக்கிறது. ஏனென்றால் அவர்கள் தங்களின் வருமானத்தில் பெரும் பகுதியை உணவுப் பொருட்கள், தானியங்களை வாங்குவதற்காகச் செலவிடுகின்றனர்,” என்கிறார் முஸ்தபா.

அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால், தாங்கள் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைக்கவோ ஊட்டச்சத்து இல்லாத வேறு உணவு வகைகளுக்கு மாறவோ, உணவு போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான செலவுகளைக் குறைக்க வேண்டிய நிலைக்கோ பொதுமக்கள் தள்ளப்படலாம் என்றும் கூறுகிறார் அவர்.

**தடை புதிதல்ல**

அதேநேரம், உணவுப் பொருட்களின் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்படுவது ஒன்றும் புதிதல்ல என்கிறது சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம்.

கடந்த ஆண்டு உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்ததற்குப் பிறகு, உணவுப் பொருட்கள் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ள நாடுகளின் எண்ணிக்கை மூன்றில் இருந்து 16 ஆக உயர்ந்துள்ளது.

இந்தோனீசியா பாமாயில் ஏற்றுமதிக்கும், அர்ஜென்டினா மாட்டிறைச்சி ஏற்றுமதிக்கும் தடை விதித்துள்ளன. இதேபோன்று துருக்கி மற்றும் கிர்கிஸ்தான் பல தானியங்களின் ஏற்றுமதிக்குத் தடை விதித்திருந்தன.

கொரோனா தொற்று காலத்தில், முதல் நான்கு வாரங்களில், 21 நாடுகள் பல்வேறு அத்தியாவசிய பொருட்களின் ஏற்றுமதிககுக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தன



என்று இந்தத் தடைக்கான சமீபத்திய சான்றுகளை கோடிட்டுக் காட்டுகிறது சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம்.

**இந்தியாவை எச்சரிக்கும் நிபுணர்கள்**

ஆனால், அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா விதித்துள்ள தடை அதிக ஆபத்துகளை ஏற்படுத்துவதாக நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, “இந்தத் தடையின் விளைவாக, சர்வதேச சந்தையில் வெள்ளை அரிசியின் விலை நிச்சயம் உயரும். அத்துடன், இந்தியாவின் இந்தத் தடை நடவடிக்கை, பல ஆப்பிரிக்க நாடுகளின் உணவுப் பாதுகாப்பை மோசமாக பாதிக்கும்,” என்று எச்சரிக்கின்றனர் டெல்லியை சேர்ந்த சர்வதேச பொருளாதார உறவுகளுக்கான இந்திய கவுன்சிலின் அசோக் குலாட்டி மற்றும் ராயா தாஸ்.

“ஜி20 நாடுகளின் மாநாட்டை நடத்தும் பொறுப்பை இந்தியா பெற்றுள்ள நிலையில், அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதிப்பது போன்ற திடீர் நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

இல்லையெனில், அரிசி ஏற்றுமதியில் நம்பகத்தன்மையற்ற நாடாக இந்தியா கருதப்படும் நிலை ஏற்படலாம்,” என்றும் எச்சரிக்கின்றனர் அவர்கள். ●



# தாந்தாமலை முருகன் உற்சவம் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு

மட்டக்களப்பு, ஓக. 05

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிகு சின்னக் கதிர்காமம் என்றழைக்கப்படும் மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைந்தது.

ஆலயத்தின் வருடாந்த திருவிழாவானது கடந்த 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 21 நாட்களாக பல்வேறு கிராம மக்களினால் திருவிழாக்கள் நடைபெற்று கடந்த புதன்கிழமை அதிகாலை தீர்த்தோற்சவத்துடன் திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

சிவஸ்ரீ மு.க.சச்சிதானந்த குருக்கள் தலைமையில் இடம் பெற்ற வருடாந்த திருவிழா மகோற்சவத்தில் நாட்டில் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குளவி கொட்டுக்கு இலக்காகிய மூன்று பேர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஓக. 05

தலவாக்கலை - கிரேட் வெஸ்ட்டன் - லூசா தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகிய மூவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்கள் இருவரும் இளைஞர் ஒருவரும் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குளவி கொட்டுக்கு இலக்கான மூவரும் தோட்ட நிர்வாகத்தின் உதவியுடன் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிகொட்டு இலக்கானவர்களுக்கு பாரிய பாதிப்பு இல்லை எனவும் லிந்துலை வைத்தியசாலையின் லிந்துலை வைத்தியசாலையின் பணிப்பாளர் ஏ ஜெயராஜன் குறிப்பிட்டார். (அ)

# மட்டக்களப்பில் 'பனியும் தண்டனையும்' நூல் வெளியீடு!

மட்டக்களப்பு, ஓக. 05

கலாநிதி கல்லாறு சதீஷ் எழுதிய பனியும் தண்டனையும் எனும் புலம்பெயர் சிறுகதைகள் தொகுப்பு அடங்கிய நூல் வெளியீட்டு விழா இன்று இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு கோட்டைக் கல்லாறு - மட்டக்களப்பு, மகா வித்யாலயத்தில் இன்று மாலை 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழாவின் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)

# பால் இறக்குமதி வேண்டாம்!

கிளிநொச்சி, ஓக. 05

முட்டையினை இறக்குமதி செய்தது போன்று பாலினையும் இறக்குமதி செய்யாதிருக்க ஏற்பாடு செய்யுங்கள் என கால்நடைப் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கால்நடை பண்ணையாளர்கள் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இது குறித்து கரைச்சி வடக்கு கால்நடை கூட்டுறவாளர் சங்கத்தின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்-தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி நிலை காரணமாக கால்நடை பண்ணையாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்பட்டதை போன்று பாலையும் இறக்குமதி செய்யிதிருக்க கால்நடை பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உரிய தீர்வினை அரசாங்கம் பெற்றுத் தர வேண்டும்-என்றார். (அ)

# போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் புதிய பிரதேச செயலாளர் பதவியேற்பு!



மட்டக்களப்பு, ஓக. 05

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் புதிய பிரதேச செயலாளராக சோ. ரங்கநாதன் பதவியேற்றுக் கொண்டார்.

இவர் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் மற்றும் அம்பாறை மாவட்ட நாவிதன் வெளி பிரதேச செயலகங்களில் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது .

நிகழ்வில் போரதீவுப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், கலாசார உத்தியோகஸ்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டு புதிய செயலாளரை வரவேற்றனர். (அ)






# நசீரிடம் ரூ.25 கோடி கோரி ஆளுநர் செந்தில் நோட்டீஸ்

**கொழும்பு, ஓக. 05**

**சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமட்டிடம் 25 கோடி ரூபாய் (250 மில்லியன்) நட்டஈடு கோரி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது சட்டத்தரணி ஊடாக நோட்டிஸ் அனுப்பியுள்ளார்.**

**இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

கடந்த பொதுத் தேர்தலில் சீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ரெலிபோன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் அமைச்சுப் பதவிப் பெற்று மொட்டுக் கட்சிக்குத் தாவியவர் நசீர் அஹமட்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடந்த மாதம் 11ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட நசீர் அஹமட் கிழக்கு மாகாண ஆளுநர் தொடர்பில் பொய்யான கருத்துக்களையும் அரச தொழில் இடமாற்றங்கள் குறித்து பிழையான தகவல்களையும் வெளியிட்டு அவற்றை கிழக்கு மாகாண ஆளுநருடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபடுத்தி கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தனது சட்டத்தரணி ஊடாக நோட்டிஸ் அனுப்பியுள்ளார்.

அத்துடன் இந்த நோட்டிஸ் கிடைக்கப் பெற்று 14 நாட்களுக்கும் 25 கோடி ரூபாய் நட்டஈட்டுத் தொகையை கிழக்கு மாகாண பாடசாலை வளர்ச்சிக்கு வழங்குமாறும் இல்லையேல் நசீர் அஹமட் மீது மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் செந்தில் தொண்டமான் எச்சரித்துள்ளார்.

நசீர் அஹமட் வழங்கும் நட்டஈட்டுத் தொகை கிழக்கு மாகாணத்தில் உள்ள 10 முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் என தெரிவித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அந்த பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலையும் இணைத்துள்ளார்.

காத்தான்குடி வலயக் கல்வி பணிப்பாளராக தற்காலிக நியமனம் பெற்றிருந்த அதிபர் சேவை தரத்தில் இருந்த ஒருவர் அப்பதவிக்கு தகுதியான கல்வி நிர்வாக சேவை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்ட பின் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இந்த விடயத்தை அரசியல் ரீதியில் தூக்கிப்பிடித்த அமைச்சர் நசீர் அஹமட், கிழக்கு மாகாண ஆளுநர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகப்படுத்தி இந்த இடமாற்றத்தை செய்ததாக கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

அது மாத்திரமன்றி கிழக்கு மாகாண கல்விச் செயலாளரை ஒரே இரவில் பதவியில் இருந்து தூக்குவதாகவும் அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

எனினும் அமைச்சர் நசீர் கூறியபடி எதுவும்நடக்கவில்லை. மாறாக கிழக்கு மாகாணத்தில் மாத்திரமன்றி நாடு முழுவதும் உள்ள அரச ஊழியர்களின் எதிர்ப்பிற்கு நசீர் அஹமட் உள்ளானார்.

கிழக்கு மாகாண அரசியல் வாதிகள்கூட நசீர் அஹமட்டின் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து தமது ஆதரவை தெரிவித்திருந்தனர்-என்றுள்ளது. (அ)

# நிந்தவூரில் தொழிற்பயிற்சி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




நிந்தவூர், ஓக. 05

நிந்தவூர் மாவட்டத் தொழிற்பயிற்சி நிலையத்தில் முழுநேர மற்றும் பகுதிநேரக் கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவ மாணவியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை மேற்படி பயிற்சி நிலையக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தொழிற்பயிற்சி அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஏ.ஏ.ஜாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, சான்றிதழ்களை வழங்கினார்.

இங்கு உரையாற்றிய பைசல் காசிம் எம்.பி., பல்மொழி அறிவுடனான தொழிற்கல்வியின் முக்கியத்துவம் அதனூடாக இளைஞர், யுவதிகள் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் பற்றி குறிப்பிட்டார்.

அரச அங்கீகாரத்துடனான தேசிய தொழிற் தகைமை (என்.வி.கி.) சான்றிதழ்களை வழங்கும் 9 முழுநேர பயிற்சிநெறிகளைக் கொண்டியங்கும் நிந்தவூர் - மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில், ஆங்கிலம் உள்ளிட்ட மேலும் பல பகுதிநேர பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன. (அ)

# மட்டு.மேற்கு வலயமட்ட விளையாட்டுப் போட்டி




மட்டக்களப்பு, ஓக. 05

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய மட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதிப்போட்டி நிகழ்வும், பரிசில்கள் வழங்கலும் நேற்று முன் தினம் நாவற்காடு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

இதன்போது, அஞ்சல், ஓட்டம், பெண்களுக்கான உதைபந்தாட்டம் போன்ற போட்டிகள் நடைபெற்றன.

பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அதிதிகள் வரவேற்கப்பட்டு, மாணவர் சிப்பாய் அணியினரின் வரவேற்பும் அதிதிகளுக்கு அளிக்கப்பட்டன.

ஒலிம்பிக் தீபம் ஏற்றி சத்தியப்பிரமாணம் செய்தலுடன் ஆரம்பமான போட்டி நிகழ்ச்சிகளின்போது மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சியும் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி, மாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவி வகிக்கும் செல்வி அகிலா கனகசூரியம் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், உடற்கல்விப்பாட ஆசிரியர்களினால் பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்கவி பாடி, வாழ்த்துமடல் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வலயமட்டப்போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை அதிகூடிய இடங்களைப் பெற்ற பாடசாலைகளும் இதன்போது வெற்றிக்கிண்ணங்கள் வழங்கி பாராட்டப்பட்டன. (அ)

# வெல்லாவெளி பிரதேச செயலகம் நடத்திய காணி நடமாடும் சேவை




மட்டக்களப்பு, ஓக. 05

மட்டக்களப்பு மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பிரதேசத்தில் வாழும் மத்திய தர வர்க்க மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் நடமாடும் சேவை போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் பிரதேச செயலாளர் சோமசுந்தரம் ரங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாலையர்கட்டு மற்றும் சின்னவத்தை பிரதேச பயனாளிகள் கலந்துகொண்டு தமது காணிகளின் உரிமம், உரித்து மற்றும் காணிகளின் ஆவணங்கள் போன்ற பிணக்குகள் தொடர்பான தீர்வைப் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் டி. எம். ஆர்.சி. தசநாயக்க, உதவிப் பிரதேச செயலாளர் வி. துலாஞ்சனன் மற்றும் போரதீவுப்பற்று பிரதேச செயலக காணிக் கிளை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# வாழைச்சேனையில் தொழிற்சந்தை

மட்டக்கலப்பு, ஓக. 05

மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களமும் கோறளைப் பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மிலின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது அரச மற்றும் தனியார் தொழிற்பயிற்சி, தனியார் தொழில் வழங்கல் தொடர்பான பதினைந்திற்கும் அதிகமான நிறுவனங்கள் கலந்து கொண்டன.

அவர்கள் தமது சேவைகள் தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கு தெளிவுபடுத்தியதுடன் தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் குறித்த ஆலோசனைகளையும் வழங்கினர்.

பிரதேச செயலக மனிதவள மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல் சிப்லியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இத்தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வில் சுமார் 80 இற்கு அதிகமான இளைஞர் யுவதிகள் பங்கேற்றனர். (அ)



# அணுவாயுதப் பேரழிவு நெருங்கி வருகின்றது!

## உலக மருத்துவத்துறை விடுத்துள்ள எச்சரிக்கை

நியூயோர்க், ஓக. 05

**உலகெங்கும் வெளியாகின்ற நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவ சஞ்சிகைகளின் ஆசிரிய பீடங்களின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கின்ற ஒரு கூட்டறிக்கையில், உலகம் அணுசக்திப் பேரழிவு ஒன்றை நெருங்கி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.**

**உலகிலிருந்து அணு ஆயுதங்கள் அனைத்தையும் அழித்தொழித்து விடுமாறு அந்த அறிக்கையில் பகிரங்கவேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.**



ஜப்பானின் ஹீரோசீமா நகரம் மீது அமெரிக்கா நடத்திய முதலாவது சிவிலியன்கள் மீதான அணு குண்டுத் தாக்குதலின் 68 ஆவது ஆண்டு நிறைவு நாள் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நினைவுகூரப்படுகிறது. அந்த சமயத்திலேயே அடுத்த அணு ஆயுதத் தாக்குதல் ஒன்று குறித்த இந்த அச்சம் வெளியிடப்பட்டிருக்கிறது.

பிஎம்ஜே, லான்செட், ஜேஏஎம்ஏ, நியூ இங்கிலன்ட் ஜேர்னல் ஒஃப் மெடிசின் ஆகியன உட்பட உலகின் மதிப்பு மிகுந்த பதிப்புகள் அடங்கலாக நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவ சஞ்சிகைகளில் சமகாலத்தில் நேற்று வியாழக்கிழமை வெளியாகியுள்ள ஆசிரிய தலையங்கங்களில் "அணு ஆயுதத் தாக்குதல் அச்சுறுத்தல் மிக குறிப்பிடக் கூடிய அளவுக்கு நெருங்கி வருவதாக" சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து அதிபர் புடின் அவ்வப்போது சாடைமாடையாக வெளியிட்டுவருகின்ற அணு ஆயுதத் தாக்குதல் மிரட்டல்கள், வட கொரியா அணு ஏவுகணைகளை அடிக்கடிச் சோதித்து வருகின்றமை, மற்றும் அணுப் பரவல் தடை உடன்படிக்கைக்கு குறுக்கே போடப்பட்டிருக்கின்ற தடைகள் போன்ற நிலைமைகளைச் சுட்டிக்காட்டுகின்ற அந்த அறிக்கை,

அணு ஆயுதங்கள் எங்களை அழித்தொழிப்பதற்கு முன்பாக அவற்றை வைத்திருக்கின்ற நாடுகள் அவை அனைத்தையும் முற்றாக ஒழித்துவிட வேண்டும் - என்று கேட்டுள்ளது.

பொதுவாக மருத்துவக் கண்டுபிடிப்புகள் தொடர்பான பிரத்தியேக செய்திகளை முந்திக் கொண்டு வெளியிடுவதற்காகப் போட்டி போடுகின்ற இந்த மருத்துவ சஞ்சிகைகள் ஒரு பொது நோக்கத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்துள்ளமை ஒரு நல்ல முன்னேற்றம் - என்று உலக மருத்துவப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த கிறிஸ் ஷெய்லின்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்த முன்னணி மருத்துவ சஞ்சிகைகள் அனைத்தும் ஒரே தலையங்கத்தை வெளியிட ஒப்புக்கொண்டிருப்பது தற்போதைய அணுசக்தி நெருக்கடியின் அவசர நிலைமையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது," - என்று அவர் ஒரு அறிக்கையில் கூறினார்.

(அ)

# டொனல்ட் ட்ரம்ப் குற்றம் அற்றவர்!

## வழக்குகளில் இருந்து விடுதலை



நியூயோர்க், ஓக. 05

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பெறுபேற்றினை மாற்றியமைப்பதற்கான தமது முயற்சிகள் தொடர்பான 4 குற்றவியல் வழக்குகளில் இருந்து குற்றமற்றவராக கருதி விடுவிக்கப்பட்டுள்ளார்.

வொஷிங்டன் டிசி நீதிமன்றில் அவர் மீதான வழக்கு விசாரணை நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதன்போது, வழக்கின் சாட்சியாகத் தொடர்புடைய எவருடனும் சட்ட ரீதியாக தொடர்பு கொள்ளக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் அமெரிக்க முன்னாள்

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கங்கள் தெரிவிக்கின்றன.

அவர் மீதான வழக்கின் விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய டொனால்ட் ட்ரம்ப், அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும், ஒரு அரசியல் எதிரியை துன்புறுத்துவதாகும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவில் ஒருபோதும் இவ்வாறான செயற்பாடுகள் நடக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயன்றமை, தேர்தல் காலங்களில் அதிகாரிகளின் நடவடிக்கைக்கு இடையூறு செய்ய முயன்றமை மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் வெற்றியை உறுதி செய்வதை நிறுத்துவதற்கு டிரம்ப் சதி செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்களுக்கான வழக்குகளின் விசாரணைக்கு நேற்று முன் தினம் முன்னிலையாகுமாறு அவருக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக டிரம்ப் வெளியிட்ட அறிக்கையில், 2024 தேர்தல் பிரசாரத்திற்கு அவர் செல்வதை தடுக்கும் விதமான முயற்சிகள் இடம்பெறுவதாக அறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# மனைவியை பிரியும் கனேடியப் பிரதமர்!

ஒட்டாவா, ஓக. 05

தனது மனைவி சோபியை பிரிவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

இதன் மூலம் இந்த தம்பதியரின் 18 ஆண்டுகால மண வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது.

51 வயதான பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் 48 வயதான அவரது மனைவி சோபி கடந்த 2005 இல் மண வாழ்க்கையில் இணைந்தனர்.

இந்த தம்பதியருக்கு 3 பிள்ளைகள் உள்ளனர்.

தங்களது பிரிவு முடிவை சார்ந்து இருவரும் சட்டப்படியான ஆவணங்களில் கையொப்பமிட்டுள்ளனர்.

இது குறித்து இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார்.

"அனைவருக்கும் வணக்கம். சோபியும் நானும் இந்த உண்மையை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

நீண்ட ஆலோசனைக்கு பின்னர் நாங்கள் இருவரும் கலந்து பேசி பிரிவதாக முடிவு செய்துள்ளோம்.

நாங்கள் ஒருவருக்கொருவர் அன்பையும், மரியாதையையும் வெளிப்படுத்தி கொண்டுள்ளோம். அது தொடரும்.

எங்கள் குழந்தைகளின் தனியுரிமைக்கு மதிப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி' என தனது பதிவில் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

(அ)

# 3 நாட்களாக மின்தூக்கியில் சிக்கி உயிரிழந்தார் பெண்!

தாஷ்கண்ட், ஓக. 05

உஸ்பெகிஸ்தான் நாட்டின் தாஷ்கண்ட் மாகாணத்தை சேர்ந்த ஓல்கா லியோன்டிவா என்பவர் கடந்த ஜூலை 24ஆம் திகதி காணாமல் போயுள்ளார்.

பணிக்கு சென்ற அவர் வீடு திரும்பாததால் அச்சத்திற்குள்ளான அவரது பெற்றோர் காவல் துறையினரிடம் தகவல் அளித்தனர்.

இந்தநிலையில், 3 நாட்களுக்கு பின்னர் லியோன்டிவாவை காவல்துறையினர் சடலமாக மீட்டுள்ளனர்.

ஜூலை 24 ஆம் திகதியன்று லியோன்டிவா 9 மாடி கட்டடத்



தில் உள்ள மின் தூக்கியில் ஏறியுள்ளார்.

எதிர்பாராத விதமாக தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால் மின் தூக்கி பாதியிலேயே நின்றுள்ளது.

அதற்குள் சிக்கிய நிலையில், லியோன்டிவா கத்தி கூச்சலிட்டுள்ளார்.

இருப்பினும் வெளியில் இருந்து அவருக்கு உதவி கிடைக்கவில்லை.

மூச்சுத் திணறலால் அவதிப்பட்ட லியோன்டிவாவால் 3 நாட்களுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல் மின் தூக்கிக்குள்ளேயே உயிரிழந்துள்ளார். அவருக்கு 6 வயதில் மகள் உள்ளார்.

இது தொடர்பாக சீனாவை சேர்ந்த மின் தூக்கி நிறுவனத்தின் மீது காவல்துறை அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

மனதை பதைபதைக்கும் வகையில் மின் தூக்கியில் இந்த பெண் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(அ)

# மனைவிக்கு 80 ஏக்கர் சூரியகாந்தி தோட்டத்தை பரிசளித்த விவசாயி!

நியூயோர்க், ஓக. 05

அமெரிக்காவின் கன்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது 50 வருட திருமண பூர்த்தியை முன்னிட்டு மனைவிக்காக சூரியகாந்தி பூந்தோட்டமொன்றை பரிசளித்துள்ளார்.

குறித்த விவசாயி தமது 50ஆவது ஆண்டு திருமண நாளை முன்னிட்டு மனைவிக்காக சுமார் 80 ஏக்கர் நிலப்பரப்பில் 1.2 மில்லியன் சூரியகாந்தி செடிகளை நாட்டியிருந்ததாக உள்ளூர் ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அவர் தனது மகனின் உதவியுடன் இரகசியமாக பூச்செடிகளை வளர்த்துள்ளார்.

இது மிகவும் சிறப்பாக உணர வைத்ததாக விவசாயியின் மனைவி ரெனி தனது மகிழ்ச்சியை பகிர்ந்துள்ளார். (அ)





## தலைமையை துறந்தார் தமீம்!

டாக்கா, ஒக. 05

முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக பங்களாதேஷ் அணியின் தலைவர் பதவியிலிருந்தும், ஆசியக் கிண்ணத் தொடரிலிருந்தும் தமீம் இக்பால் விலகியுள்ளார்.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகிறது.

அண்மையில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக தமீம் இக்பால் அறிவித்து அதிர்ச்சியளித்தார். பின்னர், பிரதமர் ஷேக் ஹசீனாவுடனான சந்திப்புக்கு பிறகு தனது ஓய்வு முடிவை அவர் திரும்பப் பெற்றார்.

இந்த நிலையில், நேற்று அணித் தலைமைப் பதவியிலிருந்து அவர் விலகுவதாக அறிவித்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

இது தொடர்பாக பத்திரிகையாளர்கள் சந்திப்பில் அவர் பேசியவை வருமாறு,

"நான் தலைமைப் பதவியிலிருந்து விலகி அணியில் ஒரு வீரராக விளையாடவுள்ளேன். எனக்கு கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி எனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன். காயம்தான் எனது பிரச்னை என நான் நம்புகிறேன். கடந்த ஜூலை 28 ஆம் திகதி ஊசி போட்டுக் கொண்டேன். எனது காயத்தை மனதில் வைத்தே தலைமைப் பதவியில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளேன். எனது இந்த முடிவு குறித்து அணி நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தியுள்ளேன். எனது இந்த முடிவு குறித்து இம்முறை பிரதமர் ஷேக் ஹசீனாவிடம் தெரியப்படுத்தி விட்டேன். அவர்கள் எனது நிலையை புரிந்து கொண்டார்கள் - என்றார். (ஐ)

### மகளிர் உதைபந்தாட்ட உலகக்கிண்ணம்

# ஜேர்மனி, தென்கொரியா அணிகள் வெளியேற்றம்!

பெர்த், ஒக. 05

மகளிர் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில் நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறாமல் ஜேர்மனி, தென்கொரியா அணிகள் வெளியேறின. மொராக்கோ அணி அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

மகளிர் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் எச் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த கடைசி லீக் ஆட்டத்தில் மொராக்கோ - கொலம்பியா அணிகள் பெர்த் மைதானத்தில் மோதின.

இதில் மொராக்கோ 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் 45ஆவது நிமிடத்தில் அனிசா லஹ்மரி கோல் அடித்து அசத்தினார். மொராக்கோ அணிக்கு இது 2ஆவது வெற்றியாக அமைந்தது.

இதன் மூலம் அந்த அணி 6 புள்ளிகளுடன் தனது பிரிவில் 2ஆவது இடம் பிடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. கொலம்பியா ஏற்கெனவே இரு போட்டிகளில் வெற்றி கண்டிருந்ததால் அந்த அணியும் அடுத்த சுற்றில் கால்பதித்தது.

கொலம்பியா, மொராக்கோ ஆகிய இரு அணிகளும் தலா 6 புள்ளிகளை பெற்றிருந்த போதிலும் கோல்கள் வித்தியாசத்தின் அடிப்படையில் கொலம்பியா தனது பிரிவில் முதலிடம் பிடித்தது.

எச் பிரிவில் நடைபெற்ற மற்றொரு லீக் போட்டியில் ஜேர்மனி - தென் கொரியா அணிகள் மோதின. இந்தப் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. தென் கொரியா தரப்பில் 6ஆவது நிமிடத்தில் சோ சோ-ஹியூன் கோல் அடித்தார்.



இதேவேளையில் ஜேர்மனி அணி சார்பில் அலெக்ஸாண்ட்ரா போப் 42ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். இந்த இரு அணிகளுமே அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்து தொடரில் இருந்து வெளியேறின.

ஜேர்மனி 3 போட்டிகளில் விளையாடி ஒரு வெற்றி, ஒரு சமநிலை, ஒரு தோல்வியுடன் 4 புள்ளிகள் பெற்றன. தென்கொரியா 2 தோல்வி, ஒரு சமநிலையை பதிவு செய்தது.

லீக் சுற்றுகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் நொக் அவுட் சுற்று இன்று தொடங்குகிறது. இந்த சுற்றுக்கு சுவிற்சர்லாந்து, ஸ்பெயின், நெதர்லாந்து, தென்னாபிரிக்கா, ஜப்பான், நோர்வே, சுவீடன், அமெரிக்கா, இங்கிலாந்து, நைஜீரியா, கொலம்பியா, ஜமைக்கா, அவுஸ்திரேலியா, டென்மார்க், பிரான்ஸ், மொராக்கோ ஆகிய 16 அணிகள் தகுதி பெற்றுள்ளன. (ஐ)

# இந்தியாவுடனான ரி - 20; மேற்கிந்திய தீவு வெற்றி!



ட்ரினிடாட், ஒக. 05

இந்திய கிரிக்கெட் அணியை 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது மேற்கு இந்தியத் தீவுகள் அணி. இந்தப் போட்டி கடைசி பந்து வரை சென்றிருந்தது.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கு இந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ளது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களை இந்தியா வென்றது. இந்நிலையில், 5 போட்டிகள் கொண்ட இருபது -20 தொடரில் தற்போது இரு அணிகளும் விளையாடி வருகின்றன.

ட்ரினிடாட்டில் நடந்த முதல் இருபது - 20 போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கு இந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 149 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணிக்காக அணித் தலைவர் ரோவ்மேன் பவல் அதிகபட்சமாக 32 பந்துகளில் 48 ஓட்டங்கள் குவித்தார். பூரண் 41 ஓட்டங்கள், பிராண்டன் கிங் 28 ஓட்டங்கள் எடுத்திருந்தனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில் சஹல் மற்றும் அர்ஷ்தீப் சிங் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

150 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இந்திய அணி விரட்டியது. தொடக்க ஆட்டக்காரர்கள் கில் மற்றும் இஷான் கிஷன் என இருவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறினர்.

சூர்யகுமார் யாதவ் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அறிமுக வீரர் திலக் வர்மா, 22 பந்துகளில் 39 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அவர் எதிர்கொண்ட 2 மற்றும் 3ஆவது பந்தை சிக்ஸர் விளாசினார்.

அதன் பின்னர் அணித்தலைவர் ஹார்திக் பாண்ட்யா, சஞ்சு சாம்சன், அக்சர் பட்டேல் ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

குல்தீப் யாதவ் மற்றும் அர்ஷ்தீப் சிங் என இருவரும் கடைசி ஓவரில் ஆட்டமிழந்தனர். 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்தது இந்தியா. இதன் மூலம் 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது. (ஐ)

## ஆர். சி. பி. அணியின் பயிற்றுநராக அன்டி பிளவர்!

பெங்களூர், ஒக. 05

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் (ஆர். சி. பி.) அணியின் தலைமை பயிற்றுநராக அன்டி பிளவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐபிஎல் தொடரில் நட்சத்திர அணியாக வலம் வருகிறது பெங்களூர் அணி. இந்த அணியின் பயிற்றுநராக கடந்த 2019ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தவர் மைக் ஹசன். இவரின் தலைமையின் கீழ் ஆர். சி. பி. அணி தொடர்ச்சியாக 3 முறை பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறியது .

ஆனால், கடந்த தொடரில் அணியால் பிளே ஓவ் சுற்றுக்குக்கூட முன்னேற முடியவில்லை. இந்நிலையில், அந்த அணியின் தலைமைப் பயிற்றுநர் மைக் ஹசனின் பதவிக் காலம் இந்த மாதத்துடன் நிறைவடைந்தது. இதையடுத்து புதிய பயிற்றுநராக அன்டி பிளவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என்று அந்த அணி அறிவித்துள்ளது.





## இந்தியாவுடனான டெஸ்டில் விளையாட அலி மறுப்பு!

லண்டன், ஒக. 05

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி சுழல் பந்து வீச்சாளர் மொயின் அலி 2021ஆம் ஆண்டில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ், பயிற்சியாளர் பிரண்டன் மெக்கலம் ஆகியோரின் வற்புறுத்தலை ஏற்று டெஸ்ட் ஓய்வில் இருந்து விடுபட்டு அண்மையில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஷ் தொடரில் விளையாடினார்.

இந்தத் தொடர் 2-2 என்று சமனில் முடிந்தது. கடைசி டெஸ்டில் 3 முக்கிய விக்கெட்களை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டார். அத்துடன், டெஸ்டில் இருந்து மீண்டும் விடைபெற்றார்.

இந்நிலையில், அடுத்த ஆண்டு ஜனவரியில் இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டெஸ்ட்களில் விளையாடுகிறது. இந்த தொடர் வரை தொடர்ந்து டெஸ்டில் விளையாடுவது குறித்து பரிசீலிக்கும்படி பயிற்றுநர்மெக்கலம் அவரை மீண்டும் கேட்டிருந்தார். இந்த முறை அவரது வேண்டுகோளை ஏற்க மொயின் அலி மறுத்து விட்டார்.

இது குறித்து மொயின் அலி கூறுகையில்,

"இந்தியாவுக்கு நான் சென்று டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு வாய்ப்பில்லை. எனது முடிவு கேட்டவர்களுக்கு தெரியும். அற்புதமான ஆஷஷ் வெற்றியுடன் எனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை நிறைவு செய்து விட்டேன். எனது டெஸ்ட் கிரிக்கெட் பயணம் ஏற்றம், இறக்கங்கள் நிறைந்தது. நான் அதை மாற்ற முடியாது. ஆஷஷ் போட்டியில் விளையாடும் வாய்ப்பை ஏற்க மறுத்திருந்தால் நிச்சயம் வருத்தப்பட்டிருப்பேன் - என்றார். (ஐ)

# தெற்கில் உள்ள மத நல்லிணக்கம் வடக்கு-கிழக்கு பகுதியில் இல்லை

## கூறுகின்றார் ஓமல்பே சோபித தேரர்



**கொழும்பு, ஓக. 05**

**வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பௌத்த விகாரைகளின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் மற்றும் தலையிடவேண்டிய ஏனைய தரப்பினர் நடவடிக்கை எடுக்காதது பிரச்னைக்குரியது என பிரதம சங்கநாயக்க தேரர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.**

கடந்த எசல பௌர்ணமி பொழுதன்று காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை நிகழ்வின்போது தமிழ் அரசியல்வாதிகள் சிலர் உட்பட பிரதேசவாசிகள் சிலர் எதிராகச் செயற்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தென்னிலங்கை பௌத்த மக்கள் ஏனைய மதங்களுடன் சகோதரத்துவத்துடன் செயற்படுகின்றார்கள் என்றால் வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்கள் ஏன் அவ்வாறு செயற்படுவதில்லை எனவும் ஓமல்பே சோபித தேரர் கேள்வி எழுப்பினார். (அ)

# பன்றி இறைச்சி வர்த்தகரின் வீட்டின் மீது துப்பாக்கி சூடு!

கொழும்பு, ஓக. 05

பன்றி இறைச்சி விநியோகத்தில் ஈடுபடும் கோடீஸ்வர வர்த்தகரின் வீட்டின் மீது இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக கந்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் நேற்று முன் தினம் இரவு 7.00 மணியளவில் வந்த இருவரே துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது வர்த்தகர் மற்றும் அவரது குடும்பத்தினர் உடனிருந்ததாகவும், ஆனால் அவர்களில் எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு மாடிகளைக் கொண்ட இந்த வீட்டின் வாயில் மற்றும் சுவர்களில் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் செயற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவர் இந்த வர்த்தகரிடம் கப்பமாக பல இலட்சம் ரூபாவை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோரப்பட்ட கப்பம் செலுத்தாததால் அவரது கையாட்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக தகவல் கிடைத்ததாக மூத்த பொலிஸ் அதிகாரி கூறினார். (அ)

# பெண்களுக்கெதிரான வன்முறை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 05

இலங்கையில் பெண்களுக்கு எதிரான கொலைக் குற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும், கடந்த மூன்று வருடங்களில் 263 பெண்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 2022 ஆம் ஆண்டில் இலங்கை பொலிஸாரால் வெளியிடப்பட்ட செயல்திறன் அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு 102 பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 2021 இல் 79 பெண்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 2022 இல் கொல்லப்பட்ட பெண்களின் எண்ணிக்கை அந்த ஆண்டை விட 29 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் இந்த அறிக்கை காட்டுகிறது.

2020 இல் கொல்லப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 82 ஆகும்.

மேலும், பெண் கொலைகள் தவிர, கற்பழிப்பு, கொலை முயற்சி, பலத்த காயம், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல், பெண்களை உடலுறவுக்காக வழங்குதல் போன்ற 600 வன்முறைக் குற்றங்கள் கடந்த ஆண்டில் பதிவாகியுள்ளன.

2021 ஆம் ஆண்டில், பெண்களுக்கு எதிரான 568 வன்முறைக் குற்றங்கள் பதிவாகியுள்ள அதே வேளை, 2020 ஆம் ஆண்டில், பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றங்களின் எண்ணிக்கை 595 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2 சிறுமிகள் துஷ்பிரயோகம்: 57 வயதான நபர் கைதானார்

கொழும்பு, ஓக. 05

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 மற்றும் 10 வயதுடைய சகோதரிகள் இருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் இரண்டு பிள்ளைகளின் தந்தை (வயது 57) மொனராகலை பொலிஸாரால் நேற்று முன் தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுரகெட்டிய பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் மொனராகலை மதுரெகெட்டிய இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தில் கள அதிகாரியாக கடமையாற்றுகின்றார்.

அகலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த இவர், மதுருகெட்டிய பிரதேசத்தில் உள்ள வீட்டில் சில காலமாக அறையில் தங்கி வேலை செய்து வந்துள்ளார்.

இரண்டு சிறுமிகளின் தாயும் தந்தையும் கூலித்தொழிலாளர்களாக வாழ்ந்து வருவதுடன், வீட்டில் இருந்து வெளியில் சென்றபோது சந்தேகநபரால் இரண்டு சிறுமிகளும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சிறுமிகள் இருவரும் மருத்துவ பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# வாகனம் மோசடி; மூன்று பேர் கைது!

## இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஓக. 05

மோட்டார் சைக்கிளின் இயந்திர அடிச் சட்டகம் மற்றும் போலி ஆவணங்களைக் கொண்டு வாகன மோசடியில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழுவினரே கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து முச்சக்கர வண்டியொன்றை கொள்வனவு செய்துள்ளார். இவ்வாறு கொள்வனவு செய்தவர் யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகனத்தின் புத்தகத்தை மாற்றுவதற்காகச் சென்றபோது வாகனத்தின் தகவல்கள் மற்றும் இதர ஆவண விடயங்களில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்கள், இது தொடர்பில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறையிட்டுள்ளனர்.

மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வாகனத்தின் புத்தகம் போலியானது என்பது தெரிய வந்தது.

அத்துடன், மோட்டார் சைக்கிளின் இயந்திரக் குறியீடுகளை முச்சக்கரவண்டிக்கு மோசடியாகப் பாவித்துள்ளமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து நல்லூரைச் சேர்ந்த நபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசாரணையில், வாகனத்தை விற்பனை செய்த கிளிநொச்சி நபர் கைது செய்யப்பட்டார். இவர் ஓர் இடைத்தரகர் என்று தெரியவருகின்றது.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் மருதங்கேணியைச் சேர்ந்த பிறிதொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபர்கள் மூவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதையடுத்து நல்லூரைச் சேர்ந்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஏனைய இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-03)

# நீர்க்கட்டண உயர்வால் வர்த்தகர்களும் பாதிப்பு

கொழும்பு, ஓக. 05

தேசிய உற்பத்திக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களும் நீர் கட்டண உயர்வால் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களின் வாழ்க்கைச் சுமையும் அதிகரித்து வருவதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகள் வருவதும் நிறுத்தப்படலாம் என பேராசிரியர் வசந்த அத்துகோரள மேலும் சுட்டிக்காட்டினார்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது கடந்த முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நீர்க் கட்டணத்தை கிட்டத்தட்ட 50 வீதத்தால் உயர்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பஸ்கள் விபத்தில் சிக்குவதால் இ.போ.சவுக்கு பெரும் நட்டம்!

கொழும்பு, ஓக. 05

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான சுமார் 1400 பஸ்கள் வருடாந்தம் விபத்துக்குள்ளாகுவதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த பஸ்களை பழுது பார்த்து மீள போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்காக வருடமொன்றுக்கு 465 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி சில்வா தெரிவித்தார்.

குறித்த பஸ்கள் விபத்திற்குள்ளானதன் பின்னர் அவற்றை மீள போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு தேவைப்படும் காலப்பகுதிக்குள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 80 கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# நான்கு மாதங்களாக இன்சுலின் இல்லை!

கொழும்பு, ஓக. 05

நான்கு மாதங்களாக எந்தவொரு வைத்தியசாலைகளிலும் இன்சுலின் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இன்சுலின் இல்லாத பட்சத்தில் நீரிழிவு நோயாளர் ஒருவருக்கு வழங்கக்கூடிய சிகிச்சை என்ன என்பது தொடர்பில் கேள்வி எழுந்துள்ளது எனவும் இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும் என்றும் ராஜித சேனாரத்ன கூறினார். (அ)

## தலைமன்னார்...

வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள், கடற்படை உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.

இங்கு பத்திரிகையாளர்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர், இந்திய சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதன் மூலம் வடக்கு அபிவிருத்தியடையும் - என்றார். (ஐ)

## நகைக் கடை...

கைதான பெண் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந் தார். இந்நிலையில், அவரைப் பார்வை யிட வந்த, அவரின் கணவர் பெண் ணைத் தாக்கினார். இந்தக் குற்றத்துக்காக அவரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-03)

## வடக்கு...

வடக்கு, கிழக்குக்கு மாகாண சபைகள் முழுமையான அரசியல் தீர்வும் அல்ல. ஆனாலும், பொலிஸ் அதிகார பிரச்னையை காட்டி தேர்தலை நடத்தாமல் இருக்கக்கூடாது.

“தேர்தலை நடத்தி, மாகாண சபை அமைந்த பிறகும் பேசலாம். கடந்த காலங்களில்கூட சட்டத்தில் இடம் இருந்தாலும், பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்கு கிடைக்கவில்லை. வடக்கு - கிழக்கு மாகாண சபைகளும் அவற்றைக் கேட்டு நீதிமன்றத்தை நாடவில்லை” - என்றார்.

மேலும், இந்திய தூதரகத்தின் மலையக கல்வி அறக்கட்டளையை புதுப்பிக்க வேண்டும். இதன் மூலம் இந்திய அரசாங்கத்தின் 300 கோடி ரூபாய் நன்கொடையை மலையக கல்வி வளர்ச்சிகாகப் பயன்படுத்துங்கள். அந்த நிதி யாருக்காக, எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்று தூதுவரிடம் வலியுறுத்தியதாகவும் மனோ எம். பி. கூறினார்.

## பல்கலைக்கழக...

முருகன் ஆலய மேலும் வரலாற்றை திரிபடையச் செய்துள்ளது.

சங்கமித்தை இலங்கைக்கு வருகை தந்தது கி. மு 3ஆம் நூற்றாண்டு என வரலாற்று மூலாதாரங்களில் திரிபடைய கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆலய தர்மகர்த்தாவினர் குறித்த ஆலயம் 1768 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்படும்போது எதுவித அரச மர எச்சங்கள் குறித்தும் தமது முன்னையவர்களோ அல்லது ஆதாரங்களோ குறிப்பிடவில்லை என்றும் தற்போது ஆலயத்தில் உள்ள மரம் மிக குறைந்தளவான காலப்பகுதிக்கு உரியது எனவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், ஆலயத்தினரிடம் ஆகக்குறைந்த கலந்துரையாடலைகூட செய்யாது எதேச்சதிகாரமான முறையில் இந்த சிங்கள அரசு திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் செயல் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

தொடர்ச்சியாக திட்டமிட்ட பௌத்த மயமாக்கலை மேற்கொள்ளும் அரசு அதனை உடனடியாக நிறுத்த வேண்டும். இதனை வலியுறுத்தி நாளைய தினம் (இன்று) சனிக்கிழமை காலை 10 மணியளவில் சுழிபுரம் சந்தி பகுதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக பொதுமக்கள், சமூக மட்ட அமைப்புக்கள், தமிழ்த் தேசியத்தின்பால் செயல்படும் இளைஞர், யுவதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைவரையும் பங்கேற்குமாறு அழைக்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## லொறி...

மோதி விபத்துக்குள்ளானது.

இதில், அந்த வானில் பயணித்த நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர்களில் 36, 46, 55 வயதான மூன்று ஆண்களும் 36, 43 வயதான இரு பெண்களும் அடங்குவர்.

படுகாயமடைந்த 11, 6 வயதான இரு சிறுவன்களும் 8 வயதான சிறுமியும் தம்புத்தேகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வான் சாரதியின் கவனக்குறைவும் அதீத வேகமுமே விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## 13 குறித்து...

என்பதற்கான வழிகளை வெளிப்படுத்தவில்லை - நானும் சொல்லவில்லை. ஆனால், அனைத்து தமிழ்த் கட்சிகளும் சமஷ்டியைத் தான் கோருகின்றன என் றும் கூறினார்.

நேற்று யாழ்ப் பாணத்தில் அவ ரின் இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் மேலும் அவர் கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன் கட்சியில் முதலில் இருந்தவர்களை இணைத்தால் அவருக்கு நல்லது. ஆனால் அவர்கள் காலை வாருவதற்கு இருக்கிறார்களா எனச் சொல்ல முடியாது. சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமற்றவர்.

பௌத்தம் வந்து 700 வருடங்களுக்கு பிறகே சிங்களம் வந்தது. சிங்கள மக்கள் பல இடங்களில் இருந்தனர் என்பது போலியானது. தொல்பொருள் இடங்கள் என அடையாளப்படுத்துவது பிழையல்ல. ஆனால், அதை சிங்களவரோடு மட்டும் இணைத்து - இங்கே சிங்களவர்கள் இருந்தார்கள் அதனை தமிழர்கள் ஆக்கிரமித்தார்கள் என்ற பிழையான தகவல் வராமல் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக தொல்பொருள் திணைக்களத்துடன் பேச வேண்டியது அவசியம்.

சமஷ்டிதான் எங்கள் குறிக்கோள் என அனைத்து தமிழ்க் கட்சிகளும் கூறுகின்றோமே தவிர, இந்த வழியில் தான் நாம் சமஷ்டியை அடையப் போகிறோம் என்று எந்தக் கட்சியும் கூறவில்லை - நானும் சொல்லவில்லை. நாம் பேசும்போது கவனமாக மக்களுக்கு அதிகாரம் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பேச வேண்டும்.

நாம் சமஷ்டி பற்றி மட்டும்தான் பேசப்போகிறோம் என்றால் 13ஆவது திருத்தத்தையும் அவர்கள் (அரசாங்கம்) தராமல் விட்டுவிடுவார்கள்.

13ஆவது திருத்தம் பற்றி சிங்கள தலைவர்கள் சாதகமாக சிந்திக்கிறார்கள் என நாம் கொள்ளலாம். ஆனால், தமிழ் அரசியல்வாதிகளை பற்றி தெரியாது. இன்று ஒன்று நாளை ஒன்று சொல்வார்கள்.

எமது இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைந்தால் அவர்களுக்கு ஆயுதம் கொடுப்பது வன்முறையில் முடியும் என்று கருதினால் புதுச்சேரி போன்று குறிப்பிட்ட சில வேலைகளை செய்யுமாறு அனுமதியளிக்கலாம் என நான் கூறினேன். இதற்குக் காரணம் நாங்கள் சிறிது சிறிதாக நம் மக்களின் அதிகாரங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகாரத்தை பெற்று அதன் விட்டத்தை பெரிதுபடுத்த வேண்டும்.

ஜனாதிபதி 13 குறித்து பாராளுமன்றில் உரையாற்றவுள்ளார். நானும் கலாநிதி விக்னேஸ்வரனும் இணைந்து ஓர் ஆவணத்தை அவரிடம் கையளித்து மாகாண சபையை எவ்வாறு பலமாக்குவது என்ற கருத்துரைகளை கொடுத்திருக்கிறோம். அதை அவர் வரவேற்றுள்ளார் - என்றும் கூறினார். (ஐ)

# கொழும்பில் குழு மோதல் ஒருவர் அடித்துக்கொலை!

கொழும்பு, ஓக. 05

இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் கொழும்பு - பாதுக்கை பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

29 வயதுடைய எச். எம். முஷாரப் என்பவரே படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் தொடர்பில் நால்வரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பாராளுமன்றின்...

என்றும் அபிவிருத்தி அடைந்த இலங்கையை உருவாக்குவதாக ஏற்றுக் கொண்ட சவாலை அவ் வண்ணமே நிறைவேற்று வதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

இலங்கை மன் றக் கல்லூரியில் நேற்று நடந்த தெங்கு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் 29ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாடு வங்குரோத்து நாடு தற்போதைய அரசாங்கத்துக்கு பிரச்னைகளை தீர்த்துக்கொண்டு முன்னேறி செல்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. கடன் நீடிப்பு முயற்சிகளை நாம் முன்னெடுத்து வருகிறோம். கடந்த காலங்களில் நாட்டுக்கு வருகை தந்த தலைவர்களுடனும் அது குறித்து கலந்துரையாடினோம்.

கடன் நீடிப்பின் பின்னரும் எமது கடன்களை மீளச் செலுத்தாமல் இருக்க முடியாது. கடன் மீள்செலுத்துகைக்கான காலத்தை நீடித்துக்கொள்வதை மாத்திரமே செய்ய முடியும். இதேபோல் அத்தியாவசிய பொருட்களில் இறக்கு மதிக்கு அவசியமான கடன்களையும் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். அந்த கடன்களை செலுத்து வதற்கான முறைமையொன்றும் அவசியம். தற்போது உள்ள சம்பிரதாய பொருளாதார முறையினால் அதனை செய்ய முடியாது. அதனால் போட்டித் தன்மை மிக்க ஏற்றுமதி பொருளாதாரத்தை நாம் முன்னெடுக்க வேண்டும்.

இருப்பினும் அதற்கு முன்னதாக கடன் விவகாரங்களை நாம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். அதுகுறித்த யோசனைகளை அமைச்சரவையில் சமர்பித்துள்ள அதேநேரம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம். அதேபோல் பல்வேறு தரப்புக்களிடத்தில் பேச்சுகளை நடத்தியுள்ளோம். பின்னர் அந்த யோசனைகளை பாராளுமன்றத்தில் சமர்பித்திருந்தோம்.

பாராளுமன்றம் அரச நிதிக் குழுவிடம் ஆலோசித்த பின்னர் அதனை ஏற்றுக்கொள்வதற்கான யோசனை அரச நிதிக் குழுவினால் முன்வைக்கப்பட்டது. கட்சி பேதமின்றி அரச நிதி குழுவின் அனைவரும் திருத்தங்களையும் முன் மொழிந்தனர். அதற்காக அரச நிதிக் குழுவுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

எதிர்கட்சியும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் என நாம் எதிர்பார்த்திருந்தோம். இருப்பினும், எதிர்கட்சிக்குள் காணப்பட்ட உள்ளக பிரச்னைகளின் விளைவாக அவர்களின் ஆதரவு கிடைக்கவில்லை. சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர் இன்னும் சிலர் வாக்களிப்பில் கலந்துகொள்வதை தவிர்த்திருந்தமையும் கவலைக்குரியது.

எவ்வாறாயினும் ஆதரவு வழங்கிய அனைவரையும் நினைவுகூருகிறேன். அது தொடர்பிலான யோசனைகள் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், கடன் நீடிப்பு பணிகளை செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதமளவில் நிறைவுச் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

அதற்காக எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு கிடைக்காவிட்டாலும், பிற்பட்ட காலங்களில் எதிர்க்கட்சி எம். பிக்கள் அதனை முன்னெடுப்பதற்கான பல உதவிகளை வழங்கியிருந்தனர். அவர்கள் அதற்கு எதிரான செயல்பாடு களை முன்னெடுக்கவில்லை. துரதிர்ஷ்ட வசமாக அனைவரினதும் ஒத்துழைப்புக் களை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. சிலர் இதற்கு தடை போட முற்படும்போது மற்றைய சிலர் வீதியிலி றங்கி போராட்டம் செய்ய முயற்சித்த னர். இருப்பினும் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் தற்போது நீதிமன்றத்திற்குச் சென்று அதற்கு தடை ஏற்படுத்த முயற்சிக்கின் றனர். அரசியல் நோக்கங்களுக்கான நீதிமன்றத்தை பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

அரச நிதி நிர்வாகம் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பான விடயமாகும். மேற்படி வேலைத் திட்டத்தை பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது. அரசமைப்பின் 4ஆவது உறுப்புரைக்கமைய மக்கள் இறைமை அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உள்ளது.

பாராளுமன்றத்தின் பொறுப்புகளை பாராளுமன்றம் நிறைவேற்றும். ஏனைய செயல்பாடுகளை நீதிமன்றத்தின் ஊடாக மேற்கொள்ள முடியும். இதன் படி நிதிசார் செயல்பாடுகள் அனைத் தும் பாராளுமன்றத்திலேயே முன்னெடுக்கப்படும். அதனால் பாராளுமன்றத்தின் சட்டத்திட்டங்களுக்கு அமையவே அரசாங்கம் செயற்படும்.

நாம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தை பாராளுமன்றத்தின் அறிவிப்பின்றி நிறுத்தப்போவதில்லை. அதனால் பாராளுமன்றம் தவிர வேறு எந்த தரப்பினரதும் ஆலோசனைகளையோ நிபந்தனைகளையோ பெற்றுக் கொள்ள நாம் தயாரில்லை. அதனால் அநாவசியமான பிரச்னைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாமென கட்சிகளிடத்தில் கோரிக்கை விடுக்கிறேன் - என்றார். (ஐ)

## வீதி விபத்துகளை...

விபத்துகளுக்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, மருத்துவமனைக்கு அண்மையாக போக்குவரத்து அதிகமாக உள்ளது. இதனால், போக்குவரத்து மார்க்கங்களை மாற்றி குறைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அத்துடன், போக்குவரத்து வாரம் ஒன்றை கடைப்பிடித்து பொது மக்கள், மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டவும் நடவடிக்கையை முன்னெடுக்க இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தின் அனைத்து துறைசார் அதிகாரிகளும் பங்கேற்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu


# இந்தியாவின் நிதியுதவியில் யாழ். தீவுகளில் மின் திட்டம்

## கேள்வி கோரியது மின்சார சபை

**கொழும்பு, ஓக. 05**

**இந்தியாவின் 12 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தை பயன்படுத்தி யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் கலப்பின மின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை மின்சார சபை கேள்வி கோரியுள்ளது.**

**முன்னதாக, இந்த திட்டத்தில் சீனாவின் நிதி யுதவி பெறப்படவிருந்தது. எனினும், இந்தியாவின் கடுமையான எதிர்ப்பு காரணமாக, தற்போது சீனா கைவிடப்பட்டுள்ளது.**




2021 ஜனவரியில், யாழ்.மாவட்டத்துக்குட்பட்ட நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைதீவு ஆகிய இடங்களில் கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை சீன நிறுவனமான சினோசார் - எடெக்வின் நிறுவனத்திற்கு இலங்கை வழங்கியது.

ஆனால் சீனாவின் தலையீட்டை இந்தியா எதிர்த்ததை அடுத்து அந்த திட்டம் இரத்து செய்யப்பட்டது. இதையடுத்து சீனா கடுமையான அதிருப்தியடைந்தது. சீனத் தூதரகமும் கோட்டாபய அரசாங்கத்திடம் கவலை தெரிவித்தது. இதனையடுத்து, சீன நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டெண்டரை ரத்து செய்ய மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தீர்மானம் எடுத்தார்.

எவ்வாறாயினும், இந்தியா இந்த விடயத்தில் தீவிர ஈடுபாடு காட்டியதுடன், சீனாவை விலக்கி, திட்டத்தை நடைமுறைப்படுத்த மானியம் வழங்கியது.

பின்னர், கொழும்பில் உள்ள சீனத் தூதரகம், மூன்றாம் தரப்பினரின் 'பாதுகாப்புக் காரணத்தால்' இந்த திட்டம் இடைநிறுத்தப்பட்டது என்றும், மாலைதீவில் உள்ள 12 தீவுகளில் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நிறுவ மாலைதீவு அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது என்றும் ட்வீட் செய்தது.

இந்தியாவின் மானியத்துடன் இத்திட்டத்தை நிறைவேற்ற புதிய கேள்விகள் கோரப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு தேசிய கட்டங்களையும் ஒன்றோடொன்று இணைக்கும் நோக்கத்துடன் இலங்கையின் எரிசக்தி துறையில் முதலீடு செய்ய இந்தியா ஏற்கனவே முன்வந்துள்ளது. முன்னணி இந்திய நிறுவனமான அதானி, மன்னார் மற்றும் பூநகரியில் சுமார் 350 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இரண்டு காற்றாலை மின் நிலையங்களைத் தொடங்குவதற்கான திட்ட அனுமதியைப் பெற்றுள்ளது. நிறுவனம் 2025 இற்குள் திட்டத்தை செயல்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# பிரதமர் நேற்று அம்பாறைக்கு விஜயம்



அக்கரைப்பற்று, ஓக. 05

"புதிய கிராமம்-புதிய நாடு" தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அம்பாறை மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோது பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, விமல வீர திஸாநாயக்க, டபிள்யூ. வீரசிங்க, எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் காசிம், திலக் ராஜபக்ஸ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள்,மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கூட்டம் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்காக கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சி மையங்களை மேம்படுத்துவதற்கான பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறை குறித்து ஆராயப்பட்டது.

மேலும் அம்பாறை பிரதான பிரச்னைகள் தொடர்பில் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கு கருத்துத் தெரிவித்தனர். அத்தோடு நெல் கொள் முதல் வேலைத்திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் விவசாயிகளுக்குரிய உரமானியத்திற்கான பவுச்சர்கள் வழங்கும் நடைமுறையில் உள்ள பிரச்னைகள் குறித்தும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. (அ)

# காங்கேசன் சிமெந்து ஆலையில் இரும்பு களவாடிய 22 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 05

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இரும்பை களவாடிய குற்றச்சாட்டின் கீழ் 22 பேர் காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தொழிற்சாலையில் இரும்பு களவாடப்படுவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றது. கைதானவர்கள் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக களமிறங்கும் முன்னாள் படை அதிகாரி

கொழும்பு, ஓக. 05

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக முன்னாள் இராணுவ அதிகாரியான லெப்டினட் ஜெனரல் ஜகத் டயஸ் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளார்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு எதிராக அதனை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்லும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு தும்முல்லை சம்புத்த ஜயந்தி விகாரையில் பிற்பகல் 3.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

சர்வகட்சி மாநாட்டை மீண்டும் கூட்டுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் சர்வக்கட்சி மாநாடு நடைபெறவுள்ளது.

பொலிஸ் அதிகாரங்களை தவிர 13 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட உள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் சர்வக்கட்சி மாநாட்டில் கலந்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி செயலகம் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, ஜகத் டயஸ், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதியாக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# புதிய அரசியல் கூட்டணி பெரும் கூட்டாக மாறும்!

## நிமல் லான்சா நம்பிக்கை

கொழும்பு, ஓக. 05

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் உறுப்பினர்களை உள்ளடக்கிய புதிய அரசியல் கூட்டணியை இதுவரையில் உருவான மிகப்பெரிய கூட்டணியாக மாற்ற தனது அணியினர் செயற்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி மற்றும் அணிகளுக்கு மேலதிகமாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச, டிரான் அலஸ், முன்னாள் அமைச்சர் குமார வெல்கம ஆகியோருடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அடுத்த வாரங்களில் மேலும் பல அரசியல் அணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் லன்சா மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தலைமையில், பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் உறுப்பினர்கள் இணைந்து புதிய அரசியல் கூட்டணியை ஆரம்பித்துள்ளார்.

இந்த அரசியல் கூட்டணியின் அலுவலகம் கொழும்பு ராஜகிரிய பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் கூட்டணியின் ஆரம்ப பொதுக் கூட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் 19 ஆம் திகதி நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த புதிய அரசியல் கூட்டணி செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# ஒற்றையாட்சிக்குள் முழு அதிகார பகிர்வு

## உறுதியாக இருக்கிறது அரசு

கொழும்பு, ஓக. 05

ஒற்றையாட்சிக்குள் முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு உடன்படுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நிர்வாக அதிகாரம் பிரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட குளம்முறிப்பு, கச்சிலைமடு, கடலியாறு மற்றும் ஒலுமடு ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தங்கள் தகுதியை அறிந்தவர்கள் என்பதை நான் அறிவேன். 30 வருடங்களாக யுத்தம் இடம்பெற்ற இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கம் என்ற வகையில் எமக்கு உள்ளது.

வடக்கு மக்கள், தெற்கு மக்கள் அனைவரும் ஒன்றுதான். எமது பிள்ளைகள் பெறும் கல்வியை வடக்குப் பிள்ளைகளும் பெற வேண்டும். ஆனால், யுத்த காலத்தில் இந்த பிள்ளைகளுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

இந்த நாட்டிலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்க வேண்டும்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் மீண்டும் விவாதங்கள் ஆரம்பமாகியுள்ளன. ஒன்றிணைந்த நாட்டின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் இடம்பெற வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

நிர்வாக அதிகாரம் பிரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அனைவரும் இருக்கிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் எம்.பி.க்கள் ஜனாதிபதியின் வேலைத் திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.